
# நகரத்தார் குரல்

(சமூக, இலக்கிய மாத இதழ்)



செந்தமிழும் சிவநெறியும் சிறக்கவந்த திருவாளர்
பைந்தமிழ் தேர் சேதுபதி பாஸ்கரனுர் உயர்நண்பர்
யாவருக்கும் நல்லவராம் இராமசாமிப் பெருவள்ளல்
தேவகோட்டைச் சிற்றரசர் திருவடிகள் வாழியவே

நவம்பர் 1992



செப்டம்பர் கடைசியில் கோவிலூர் ஆண்டவர் மன்றத்தின் தலைவர் தவத்திரு காசிவிசுவநாத ஞான தேசிக சுவாமிகள் சென்னை மாநகரத்திற்கு வருகை தந்து ஆங்காங்கே அருளாசி வழங்கி, ஆன்மீகச் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள்.

சென்னை கமலா திரையரங்கிற்கு வருகை தந்தபோது அவர்களுக்குப் பூர்ண கும்ப மரியாதையுடன் வரவேற்பு அளிக்கப் பெற்றது. படத்தில் அவர்களுடன் திரு. வி. என். சிதம்பரம் செட்டியார், திரு. பழ. கருப்பையா, திரு பிரம்மச்சாரி அத்யாத்ம சைதன்யா மற்றும் வடபழனி முருகன் கோவில் சிவாச்சாரியார்கள் உள்ளனர்.



## அடுத்த இதழ்...

புரட்சி எழுத்தாளர்

**தமிழ்வாணனின்**

நினைவு இதழாக
பல சிறப்புச் செய்திகள்
கட்டுரைகளுடன்
வெளிவரும்.

உ
சிவமயம்

# நகரத்தார் குரல்

(சமூக, இலக்கிய மாத இதழ்)

குரல் 11
ஒலி 10

ஆங்கிரஸ
ஐப்பசி

நவம்பர்
1992

மானமா மடப்பிடி வன்கையால் அலகிடக்
கானமார் கடகரி வழிபடுங் கானப்பேர்
ஊனமாம் உடம்பினில் உறுபிணி கெடஎண்ணில்
ஞானமா மலர்கொடு நணுகுதல் நன்மையே.

— திருஞானசம்பந்தர்

ஆசிரியர்:
வி. என். சிதம்பரம் செட்டியார்

வெளியிடுபவர்:
நடராஜ் அண்ணுமலை

துணை ஆசிரியர்:
எல். சுந்தரம்

அலுவலகம் :
20, கிருஷ்ணுபுரம் 4 ஆவது குறுக்குத் தெரு,
மதுரை-625 009

தொலைபேசி p. p. 32084

ஆண்டுச் சந்தா ரூ. 30-00 டெபாசிட் சந்தா ரூ. 300-00

# தேவகோட்டை ஜமீன்தார்
# அழ. அரு. இராமசாமிச் செட்டியார்

தேவகோட்டை அழ. அரு. இராமசாமிச் செட்டியார் அவர்கள் இராமநாதபுரம் மன்னர் M. பாஸ்கர சேதுபதி அவர்களுடைய நெருங்கிய நண்பர். பாஸ்கர சேதுபதி பெரியகொடையாளி. இராமநாதபுரம் ஜமீன், நீதி மன்ற நிர்வாகத்தில் (Court of wards) இருந்தபோது அவருக்கு அப்போதைய செலவுகளுக்கு இராமசாமிச் செட்டியார் அவர்



கள் எந்தவித எழுத்துப்பூர்வ ஆதாரமுமில்லாமல் ரூபாய் மூன்றரை இலட்சம் வரை 1894ல் கடன் கொடுத்திருந்தார்கள். பாஸ்கர சேதுபதி 'மேஜ'ரான போது அவருடைய உறவினர் ஒருவர் ''பாஸ்கர சேதுபதி செலவாளி; பலரிடம் கடன் வாங்கியிருக்கிறார்; தேவகோட்டை இராமசாமிச் செட்டியார் அவர்களிடமும் ரூபாய் மூன்றரை இலட்சம் வரை கடன் வாங்கியிருக்கிறார். எனவே அவரிடம் ராஜ்யத்தை ஒப்படைக்கக் கூடாது'' என்று மனுக் கொடுத்திருந்தார். அந்த மனு மீது சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு நடந்தது. அவ்வழக்கில் இராமசாமிச் செட்டியார் அவர்களும் சாட்சி சொன்னார்கள்.

''ராஜாவை உபசரிப்பது எங்கள் கடமை. அவரை என்றும் உபசரித்து வருவேன். நான் அவருக்குக் கடன் எதுவும் கொடுக்கவில்லை'' என்று கூறியதோடு தன்னுடைய 'இராமசாமி அன்கோ' நிறுவனத்தின் கணக்குப் புத்தகங்களையும் நீதி மன்றத்தில் ஆஜர் படுத்தினார். அதில் பாஸ்கர சேதுபதியிடம் கொடுத்த தொகைகள் எல்லாம் 'இராம. தனது பற்று' என்று எழுதப் பெற்றிருந்தது. இராமசாமிச் செட்டியார் அவர்களின் சாட்சியத்தை நம்பி அம்மனு நிராகரிப் பெற்று பின்னர் பாஸ்கர சேதுபதியிடம் ஜமீன் ஒப்படைக்கப் பெற்றது.

சாட்சிக் கூண்டிலிருந்து இராமசாமிச் செட்டியார் அவர்கள் இறங்கி வந்ததும் பாஸ்கர சேதுபதி அவரைக் கட்டித் தழுவி ''அப்பா இந்த நன்றியை நான் என்றும் மறக்க மாட்டேன்'' என்று மகிழ்ச்சி பொங்கக் கூறியதுடன் மேற்கொண்டு ஒன்றரை இலட்சம் ரூபாய் பெற்றுக் கொண்டு இராமசாமிச் செட்டியார் அவர்களை தேவகோட்டைப் பகுதிகளுக்கு ஜமீன்தாராக ஆக்கி வைத்து சமஸ்தானம் (இருபத்து இரண்டரை கிராமம்) வழங்கினார் அதன்படி அழ. அரு இராமசாமிச் செட்டியார் அவர்கள் 1895 முதல் 1899 வரை அந்த ஜமீனை ஆண்டு வந்தார்கள்.

தகவல் : அழ அரு. சோம. நாராயணன் செட்டியார்

நேர்முகம் : எல். சுந்தரம்

# தாம்பூலத்திற்குச் சுண்ணும்பைப் பயன்படுத்தாத குடும்பத்தினர்!

தேவகோட்டை அழ. அரு. இராமசாமிச் செட்டியார் அவர்கள் ஒரு முறை இராமநாதபுரம் மன்னர் பாஸ்கர சேதுபதியுடன் விருந்துண்டார்கள். விருந்துண்ட பின், மன்னரின் துணையாளர் தாம்பூலம் போட்டுக் கொள்ள வெற்றிலை, பாக்குத் தாம்பாளத்தை இராமசாமிச் செட்டியார் அவர்களிடம் கொடுத்தார். அப்போது அதில் வெற்றிலை பாக்கு மட்டுமே இருந்தது. சுண்ணும்பு வைக்கப்படவில்லை. அதை வெளிக்காட்டாமல் சுண்ணும்பு இல்லாமலேயே இராமசாமிச் செட்டியார் தாம்பூலம் போட்டுக் கொண்டார்கள். பேச்சு சுவாரஸ்யத்தில் முதலில் அதைக் கவனிக்காத பாஸ்கர சேதுபதி பின்னீடு அதைக் கவனித்து ''தாம்பாளத்தில் சுண்ணும்பு வைக்கவில்லையே..'' என்று கேட்க, அரண்மனை சிப்பந்திகளிடம் மன்னர் கோபம் கொள்ளாதிருக்க ''நாங்கள் தாம்பூலத்திற்குச் சுண்ணும்பு பயன்படுத்துவதில்லை'' என்று மன்னர் முன்பு கூறினார்கள். மன்னரும் 'அப்பாவுக்கு ஏற்றபடி தனது துணையாளர்கள் செயல்பட்டார்கள்' என எண்ணி மகிழ்ச்சியடைந்து பாராட்டி பரிசுகளும் வழங்கினர்.

மன்னர் முன்பு ''தாம்பூலத்திற்கு நாங்கள் சுண்ணும்பு பயன்படுத்துவதில்லை'' என்று கூறிய காரணத்தால் அந்த வாக்கை நிறைவேற்றுவான் வேண்டி இராமசாமிச் செட்டியார் அவர்கள் அதுமுதல் தாம்பூலத்திற்குச் சுண்ணும்பைப் பயன்படுத்துவதே இல்லை. மேலும் மன்னர் முன் 'நாங்கள்' என்று அவர்கள் கூறியதால் அவர்களது குமாரர்களும் பேரன்களும் இன்று வரை தாம்பூலத்திற்குச் சுண்ணும்பைப் பயன்படுத்துவதில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். இது நமக்குத் திருநீலகண்ட நாயனர் வரலாற்றை நினைவு படுத்துகிறது.

திருநீலகண்டர் பரத்தையர் பால் சார்ந்து தம் இல்லம் வந்த போது தம் மனைவியார் கோபம் கொண்டதைச் சாந்தப்படுத்த அவரை அணைக்கச் சென்றார். அப்போது அந்த அம்மையார் ''எம்மைத் தீண்டு வீரரயின் திருநீலகண்டம்'' என்று இறைவன் மீது ஆணையிட்டுச் சொன்னர். திருநீலகண்டத்தின் பால் பற்றுக் கொண்ட திருநீலகண்ட நாயனர் 'எம்மை' என்று அந்த அம்மையார் பன்மையாகச் சொன்னதால் 'மாதர் தம்மை மனத்தினலும் தீண்டேன்' என்று ஆயுள் பரியந்தம் வாழ்ந்து வந்தார். அதேபோல 'நாங்கள்' என்று இராமசாமிச் செட்டியார் அவர்கள் பன்மையில் கூறியதால் அது முதல் அவர்களது பரம்பரையினர் இன்றும் சுண்ணும்பு இல்லாமல் தாம்பூலம் போட்டுக் கொண்டு வருகிருர்கள்.

தகவல் : அழ. அரு. சோம. நாராயணன் செட்டியார்
தேவகோட்டை


நேர்முகம் : எல் சுந்தரம்

# 'செட்டி', 'செட்டியார்' ஆயிற்று!

தேவகோட்டை ஜமீன்தார் அழ. அரு. இராமசாமிச் செட்டியார் அவர்கள் காலத்திற்கு முன்னர் நம் நகரத்தார்களை மற்ற இனத்தவர் 'செட்டி' என்றே அழைத்து வந்தனர். அக்காலத்தில் நகரத்தார்களும் தங்கள் பெயருக்குப் பின்னால் 'செட்டி' என்றே கையொப்பமிட்டு வந்தனர். இன்றும் கூட இசைபிடிமானத்தில் இன்ன செட்டி மகன் இன்னார் என்றே எழுதி வருகின்றனர்.

அழ. அரு. இராமசாமிச் செட்டியார் அவர்கள் இராமநாதபுரம், சிவகங்கை மன்னர்களுடன் நெருங்கிப் பழகி சமஸ்தானம் பெற்றதும் 'செட்டியார்' என அழைக்கப் பெற்றார்கள். அதன் காரணமாக அவர்கள் வீட்டிற்குச் 'செட்டியார் வீடு' என்றும் அவர்கள் வகைக்கு 'செட்டியார் வகை' என்றும் பெயர் வந்தது. அது முதல் நகரத்தார்கள் 'செட்டியார்கள்' என அழைக்கப் பெறுகின்றனர்.

அழ. அரு. இராமசாமிச் செட்டியார் அவர்கள் உப்பூர், காளையார்கோவில், இராமேஸ்வரம் ஆகிய ஊர்களில் திருக்கோயில் திருப்பணி செய்தவர்கள். 1890 ஆம் ஆண்டிலேயே கள்ளிக்கோட்டையில் நூற்பாலை தொடங்கி நடத்தியவர்கள்.



நாகை காயிதே மில்லத் மாவட்டம் கீழப்பெரும்பள்ளம் கிராமத்தில் ரூ. 30,000 செலவில் அமைக்கப் பெற்றுள்ள நுழைவு வாயிலை 8-9-92 அன்று திரு. வி. என். சிடி. திறந்து வைத்தபோது எடுத்த படம். அருகே (இடது) எருக்கட்டாஞ்சேரி திரு. ஆர். காளிதாஸ் (வலது) திரு. கே. பி. சண்முகசுந்தரம் பிள்ளை, திரு. ஓ. டி. முத்தையா பிள்ளை, கீழப்பெரும்பள்ளம் திரு. ஆர். கே. அரங்கநாதம் பிள்ளை உள்ளனர்.

# தேவகோட்டை வன்றெண்டர் செட்டியார்

தேவகோட்டை வன்றெண்டர் செட்டியாருக்கு நாராயணன் செட்டியார் என மற்றொரு பெயருண்டு. இவர் இலுப்பைக்குடிக் கோவில் – ஐந்து வீட்டார் வகையைச் சேர்ந்தவர். பிறவியிலேயே கண் பார்வையற்றவர்.

வன்றெண்டர் செட்டியார் திரிசிரபுரம் (திருச்சி) மகா வித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளையின் மாணக்கர். வன்றெண்டரின் மாணக்கர்களில் ஒருவர் தான் நகரத்தார் வரலாற்றை முதன் முதலில் எழுதிய தேவகோட்டை மேலை வீட்டுச் சிந்நயச் செட்டியார் ஆவார்.

வன்றெண்டரிடம் யாராவது பாடல் எழுதித் தரச் சொல்லிக் கேட்டால் ''நால்வர் எழுதியதைப் படியுங்கள்'' என்பார். ரொம்பவும் கட்டாயப்படுத்திஞல் ''நால்வருக்கு இணையான மேலை வீட்டுச் சிந்நயச் செட்டியாரைப் பாருங்கள்'' என்பார்.

சிந்நயச் செட்டியார் நான்காம் தமிழ்ச் சங்கம் கண்ட பாண்டித்துரைத் தேவரின் சம காலப் புலவர். மயில்மலை பிள்ளைத் தமிழ் பாடியவர். சிலம்பைப் பதிற்



சிங்கயச் செட்டியார்

றுப் பத்து அந்தாதி போன்ற பல நூல்களைப் பாடியவர்.

பெரிய புராணத்தில் ஒரு பாடலுக்குப் பொருள் தெரிந்து

கொள்ளவேண்டி மீனாட்சிசுந்தரம் பிள்ளையிடம் ஒரு நண்பர் வேண்ட அவர் வன்றொண்டரைக் கேட்கச் சொல்ல, உடனே அவர் தேவ கோட்டை சென்று ''பெரிய புரா ணத்தில் ஒரு சந்தேகம்...'' எனக் கேட்க, '' இந்தப் பாடலுக்குக் குருநாதர் இன்ன பொருள் சொன்னதாக எனக்கு நினைவு'' என்று கூறி ஆசிரியருக்குச் சிறப்புச் சேர்த்தார்.

வன்றொண்டர் தேவகோட்டை யில் சேக்கிழாருக்குத்தனி ஆலயம் எழுப்ப குன்றத்தூர் மலையிலி ருந்து சிலை தயாரித்துக்கொண்டு வந்தார். ஆனால் நகரத்தார் வேண்டுகோளுக்கிணங்க சேக் கிழார் ஆலயத்திற்கென ஒதுக்கி வைத்திருந்த இடத்தை நகரச் சிவன் கோவில் கட்டக் கொடுத்து உதவினர். அதற்காக அவர் வேண்டுகோளின்படி தேவ கோட்டை சிவன் கோவிலில் சேக் கிழாருக்கு ஒரு தனிக் கருவறை அமைத்துக் கொடுத்திருக்கிறார் கள். இன்றும் கூட சிவன்கோவி லில் உள்ள பெரிய மணியில் 'சேக்கிழார் கோவில் மணி' என்ற பெயரைக் காணலாம்.

ஒரு சமயம் வன்றொண்டர் செட்டியார் தேவகோட்டை ஜமீன்தார் அழ. அரு. இராம சாமிச்செட்டியார் அவர்கள் மாளி கைக்கு எழுந்தருளிய போது அவரை இராமசாமிச் செட்டியார் அவர்களது துணைவியார் திருமதி அலமேலு ஆச்சி ''வாங்க அண்ணே'' என்று வரவேற்றார் கள். அப்போது அவர் ''இங்கு பிள்ளைகள் இருந்தால் தண்ணீர் கொண்டு வரச் சொல்'' என்றார். அதற்கு ஆச்சி அவர்கள் ''நான் கொண்டு வருகிறேனே'' என் றார். அதற்கு அவர் ''பரவா யில்லை. நீ சுத்த போஜனமாக (சைவம்) இருக்க மாட்டாய் என எண்ணி பிள்ளைகளைத் தண்ணீர் கொண்டு வரச் சொன்னேன்'' என்றார். உடனே ஆச்சி அவர்கள் ''இப்போது முதல் சுத்தபோஜன மாக ஆனால் நான் தண்ணீர் கொண்டு வரலாமா?'' என்று கேட்டு தண்ணீர் கொண்டு வந்து கொடுத்தார்கள். அன்று முதல் வந்தவரை உபசரித்ததன் நிமித் தம் ஆச்சி அவர்கள் சுத்த போஜனமாக ஆனார்கள்.

தகவல்: அழ. அரு. சோம.
நாராயணன் செட்டியார்
தேவகோட்டை

## குற்றாலத்தில் கண்ணதாசன் விழா

நெல்லை கட்டபொம்மன் மாவட்ட கவிஞர் கண்ணதாசன் நற்பணி மன்றத்தின் சார்பில் 7-11-92 & 8-11-92 ஆகிய இரு தினங்கள் குற்றாலத்தில் கவியரசு கண்ணதாசனின் முத லாம் ஆண்டு விழா நடைபெற உள்ளது. மாநிலத் தலைவர் திரு. வி. என். சிதம்பரம் செட்டியார், மாநிலப் பொதுச் செயலாளர் 'மக்கள் கவிஞர்' திரு. அரு. நாகப்பன், தமிழக அமைச்சர் மாண்புமிகு எஸ். ரகுபதி, திரு. முக்தா சீனிவாசன் கவியரசரின் புதல்வர்கள் திரு. கண்மணி சுப்பு திரு. காந்தி கண்ணதாசன் கவிஞர் திரு. நா. காமராசன் மற்றும் கவிஞர்கள், பேராசிரியர் கள் இவ்விழாவில் கலந்து கொள் கிறார்கள்.

உ சிவமயம்
ஸ்ரீ முருகன் துணை
ஓம் சாமியே சரணம் ஐயப்பா

# ஸ்ரீ முருகன் டிராவல் ஏஜன்ஸி



9, வடக்காவணி மூல வீதி,
மதுரை-625 001
போன்: 31168

## சபரிமலைப் பயண விபரம்

| | | | |
|---|---|---|---|
| 15-11-92 & 16-11-92 | கார்த்திகை மாதப் பிறப்பு தெரிசனம் | 2 நாள் | ரூ. 225 |
| 21-11-92 & 22-11-92 | கார்த்திகை மீ 5உ | 2 நாள் | ரூ. 225 |
| 28-11-92 & 29-11-92 | | 2 நாள் | ரூ. 225 |
| 29-11-92 To 2-12-92 | | 4 நாள் | ரூ. 450 |
| 29-11-92 To 1-12-92 | | 3 நாள் | ரூ. 330 |
| 4-12-92 To 6-12-92 | | 3 நாள் | ரூ. 340 |
| 7-12-92 To 9-12-92 | | 3 நாள் | ரூ. 330 |
| 10-12-92 To 12-12-92 | | 3 நாள் | ரூ. 340 |
| 13-12-92 To 15-12-92 | | 3 நாள் | ரூ. 340 |
| 15-12-92 To 18-12-92 | | 4 நாள் | ரூ. 450 |
| 16-12-92 To 18-12-92 | | 3 நாள் | ரூ. 340 |
| 19-12-92 To 21-12-92 | | 3 நாள் | ரூ 340 |
| 22-12-92 To 27-12-92 | | 6 நாள் | ரூ. 690 |
| 22-12-92 To 24-12-92 | | 3 நாள் | ரூ. 340 |
| 25-12-92 To 27-12-92 | | 3 நாள் | ரூ. 340 |
| 1- 1-93 To 3- 1-93 | | 3 நாள் | ரூ. 350 |
| 5- 1-93 To 7- 1-93 | | 3 நாள் | ரூ. 340 |
| 8- 1-93 To 10- 1-93 | | 3 நாள் | ரூ. 350 |
| 9- 1-93 To 11- 1-93 | | 3 நாள் | ரூ. 340 |
| 1- 1-93 To 4- 1-93 | பெருவழிப் பயணம் | 4 நாள் | ரூ. 450 |
| 5- 1-93 To 8- 1-93 | ,, | 4 நாள் | ரூ. 450 |
| 9- 1-93 To 12- 1-93 | ,, | 4 நாள் | ரூ. 450 |
| 11- 1-93 To 16- 1-93 | ,, | 6 நாள் | ரூ. 675 |
| 13- 1-93 To 15- 1-93 | ஜோதி தெரிசனம் | 3 நாள் | ரூ. 195 |
| 17- 1-93 & 18- 1-93 | (படி பூஜை) | 2 நாள் | ரூ. 225 |

மேற்படி சபரிமலைப் பயணங்கள் பல்வேறு வழித் தடங்களில் செல்பவை. மேற்படி பயணங்கள் யாவும் பஸ் கட்டணம், காலை ஆகாரம், பகல் சாப்பாடு, மாலை சுவீட் காரம், காபி, இரவு ஆகாரம் உள்ளிட்டதாகும். இருமுடி கட்டவசதி உண்டு. இருமுடி சிலவு ரூ. 60/- தனி. அட்வான்ஸ் ரூ. 100/- வீதம் செலுத்தி விரைவில் பதிவு செய்ய வேண்டுகிறோம்.

# கோவை சங்கத்தில் பாராட்டு விழா

கோவை நகரத்தார் சங்கத்தின் சார்பில் 28-8-92 அன்று கோவையில் தமிழக தொழிலாளர் நலத்துறை அமைச்சர் மாண்புமிகு எஸ். ரகுபதி அவர்களுக்கும் காரைக்குடி அழகப்பா பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் திரு. கே. நாகப்பனுக்கும் 'மீனாட்சி திருமைந்தன்' திரு. வி. என். சிதம்பரம் செட்டியார் தலைமையில் பாராட்டு விழா நடைபெற்றது.

சங்கத் தலைவர் திரு. எஸ்இ எஸ்வி. நாராயணன் வரவேற்றார்.

அமைச்சர், துணை வேந்தர் ஆகியோரின் அருமை பெருமைகளையும் நகரத்தாரின் சிறப்புக்களையும் பாராட்டி திரு. எம். ஏ. எம். எஸ்பி. காசிச் செட்டியார், கவிஞர்கள் திரு. எல். சோமு திரு. சிவல்புரி சிங்காரம், திரு. காசு மணியன் மற்றும் திரு. சபா. சிங்காரம், திரு. ராஜு எம். எல். ஏ. ஆகியோர் பேசினர்.

சிறப்பு விருந்தினர்களின் ஏற்புரைக்குப்பின் நிர்வாகச் செயலாளர் திரு. ச. சுந்தரேசன் நன்றி கூறினர்.

இந்த விழாவிற்கான ஏற்பாடுகளை நிர்வாகச் செயலாளர் திரு. ச. சுந்தரேசன், பொதுச் செயலாளர் திரு. பிஎல். சிவசாமி, பொருளாளர் திரு. விஆர். அழகப்பன், திரு. சபா. சிங்காரம் திரு. பழநியப்பன் திரு. ஆர்எம். வள்ளியப்பன், திரு. என். முருகப்பன், திரு. ச. சிதம்பரம் ஆகியோர் சிறப்பாகச் செய்திருந்தனர்.

---



காரைக்குடியில் தொழிலதிபர் டாக்டர் ஏ. சி. முத்தையா அவர்களுக்கும் தமிழக தொழிலாளர் நலத்துறை அமைச்சர் மாண்புமிகு எஸ். ரகுபதி அவர்களுக்கும் 1-10-92 அன்று நடந்த பாராட்டு விழாவில் அவர்களுடன் தவத்திரு குன்றக்குடி அடிகளார், டாக்டர் திருமதி இராதா தியாகராஜன் உள்ளனர்.



# எனது ஆலய அனுபவங்கள்

வி.என்.சிதம்பரம்

— 17 —

## மீனாட்சி அம்மன் பட்டாபிஷேக வரலாறு

திருக்கல்யாணம் நடைபெறுவதற்கு முன்பாக அம்மனுக்குப் பட்டாபிசேகம் நடைபெறும். அதன் வரலாறாவது :-

பார்வதியார் அவதாரமாக மலையத்துவ பாண்டியனுக்கும், காஞ்சனமாலைக்கும் ஒரு பெண் குழந்தை பிறந்தது. அக்குழந்தைக்கு இயற்கைக்கு மாறாக மூன்று தனங்கள் (மார்பகம்) இருந்தன. இதை எண்ணி யெண்ணி மன்னர் வருந்திய நிலையிலிருந்தபோது, அவரது கனவில் சிவபெருமான் தோன்றி, ''நீ எவ்விதக் கவலையும் கொள்ள வேண்டாம். நேரம் வரும்போது மூன்றாவது தனம் மறைந்து விடும்'' எனக் கூறி மறைந்தார். மன்னன் அளவு கடந்த மகிழ்ச்சி வெள்ளத்தில் திளைத்தார்.

மன்னர் தனது மகள் தடாதகையை ஆண் பிள்ளைக்கு நிகராக வளர்த்து அரசகுமாரனுக்கு கற்றுக் கொடுக்கக்கூடிய போர்ப் பயிற்சி உட்பட அனைத்துக் கலைகளையும் கற்க வைத்தார். தடாதகை நாளொரு மேனியும் பொழுதொருவண்ணமும் அதிசயிக்கத் தக்க வகையில் வீராங்கனையாக வளர்ந்து போர்க்களத்தில் அனைத்து அரசர்களையும் வீழ்த்தி வெற்றி வாகை சூடி பின் கயிலையங்கிரிக்குச் சென்றார். அங்கு சிவபெருமானைப் பார்த்த

வுடன் மூன்றாவது தனம் (மார் பகம்) மறைந்து விடுகிறது. இவ ரிடத்தில் சிவபெருமான் மதுரைக்கு வந்து மணம் புரிவ தாகச் சொல்லி அனுப்புகிறார். அதன்படி மதுரைக்கு வந்து திரு மணம் புரிந்து கொள்கிறார். அது தான் மீனாட்சி திருக்கல்யாணம்!

திருக்கல்யாணத்துக்கு முன்பு மீனாட்சிக்கு பட்டாபிசேகம் நடை பெறும். மீனாட்சி அம்மனுக்கு கிரீடம் சாத்தி கையில் செங்கோல் கொடுப்பார்கள். 400 ஆண்டு களுக்கு முன்பு மதுரையை ஆண்ட மன்னர் திருமலை நாயக்கர் அதை விமரிசையாகக் கொண்டாடினர். அவருடைய காலத்தில் ஆலயத் திலிருந்து இரண்டு சிவாச்சாரி யார்கள் குதிரையில் அரண்மனைக் குப் போய் மன்னர் திருமலை நாயக்கரை அழைப்பார்கள். மன் னர் திருமலை நாயக்கர் தனது பரிவாரங்களுடன் ஆலயத்திற்கு வருவார். சித்திரைத் திருவிழா வின் எட்டாம் நாளில் அன்னை மீனாட்சி அம்மனுக்கும் ஆவணி மூலத் திருவிழாவின் ஏழாம் நாளில் சோமசுந்தரப் பெருமா னுக்கும் பட்டாபிசேகம் அவரவர் சந்நிதியில் உள்ள ஆறுகால் பீடங் களில் அன்றிரவு நடைபெறும். சித்திரைத் திருவிழாவில் மீனாட்சி அம்மனுக்கு கிரீடம் சாத்தி அவ ரது திருக்கரத்தில் செங்கோல் கொடுத்த பின் அதை வாங்கி மன் னர் திருமலை நாயக்கரிடத்தில் சிவாச்சாரியார்கள் கொடுப்பார் கள். மன்னர் செங்கோலைப் பெற்று அனைத்து மரியாதை களுடன் அம்மன் சந்நிதியில் இருந்து புறப்பட்டு சுவாமி சந்நி திக்கு இரண்டாம் பிரகாரம் வழி



ஸ்ரீ மீனுட்சி அம்மன் பட்டாபிஷேக விழாவில் கையில் செங்கோ லுடன் திரு வி. என். சிதம்பரம் செட்டியார் அவர்கள். அருகே திரு. சி. நாகப்பன்.



மதுரை கணேஷ் ஆட்டோ மொபைல்ஸ் நிறுவனத்தின் சேலம் கிளையின் முதல் விற்பனையை 9-10-92 அன்று சென்னை 'ரானே பிரேக் லைனிங் லிட்' நிறுவனத்தின் பொது மேலாளர் திரு. இக்பால் துவக்கி வைக்க, சேலம் சண்முகா எலக்ட்ரிக்கல்ஸ் அதிபர் திரு. பெரியசாமி அதனைப் பெற்றுக் கொண்டபோது எடுத்த படம். அருகில் கணேஷ் ஆட்டோ மொபைல்ஸ் உரிமையாளர் திரு. ஏஎல். பெரிய கருப்பன், லமினா ஸ்பிரிங் மேலாளர் திரு. B. S. பாலிகா திரு. செல்வம் அழகப்பன் உள்ளனர்.

---

யாக வலமாகக் கொண்டு வந்து மீண்டும் அன்னை மீனாட்சி அம்மையிடம் செங்கோலைச்சேர்ப்பிப்பார்.

அதன் பிறகு செங்கோலை எடுத்துக் கொண்டு அரண்மனைக்குச் செல்வார். அங்கு சிம்மாசனத்தில் அச்செங்கோலை வைத்து விட்டு ஒரு அடி தாழ்வாக உள்ள ஆசனத்தில் மன்னர் திருமலை நாயக்கர் அமர்ந்து கொள்வார். சிற்றரசர்களும், ஜமீந்தார்களும் மன்னர் திருமலை நாயக்கரிடம் கப்பம் செலுத்துவார்கள். அதன் பிறகு, ஆடல், பாடல் விருந்து நடைபெறும். பட்டாபிசேகத்தை வெகுவிமரிசையாகக் கொண்டாடியவர் மன்னர் திருமலை நாயக்கரே. எவருடைய ஆட்சி மதுரையில் நடந்தாலும் அது அன்னை மீனாட்சியின் ஆட்சி நடப்பதாக மக்கள் இன்றும் நம்புகிறார்கள். மன்னர் செங்கோலை ஏந்தி வருகிறபோது மக்கள் அவரை மன்னராக எண்ணாது அன்னை மீனாட்சியாகவே எண்ணி வணங்குவார்கள். மன்னரும் தன்னை மீனாட்சி அம்மையின் பிரதிநிதியாக எண்ணிய காரணத்தினால்தான், செங்கோலை உயரமான ஆசனத்தில் வைத்துவிட்டு, தான் அதற்குத் தாழ்வான ஆசனத்தில் அமர்ந்தார். அப்படிப்பட்ட புனிதமான அன்னை

மீனாட்சி அம்மையின் செங்கோலை, மன்னர்கள் வாங்கிய செங்கோலே நகரத்தார்கள் செய்த புண்ணியத்தால் ஆண்டிற்கு இரண்டு முறை வீதம் எட்டாண்டுகள் தொடர்ந்து (பதினாறு முறை) அடியேனும் வாங்கிய பெறும் பேற்றினைப் பெற்றேன். அச் செங்கோலைத்தொட்டவுடனேயே ஏதோ என்னை அறியாது மின்சாரம் பாய்கின்ற ஒரு உணர்வைப் பெற்றேன்.

(வளரும்)

## திருமணம்

குருவிக்கொண்டான்பட்டி திரு. அ.சொ.தெ. சொக்கலிங்கம் செட்டியார் பேரனும் திரு. தேனப்ப செட்டியாரின் புதல்வனுமான செல்வன் தியாகராஜன் B. Com. D.T.T. க்கும் நற்சாந்துபட்டி திரு. பெ. ராம. லெ.ராம. நடராஜன் செட்டியார் புதல்வி செல்வி ஜெயலெட்சுமி B.Com. க்கும் 10-9-92 அன்று நற்சாந்துபட்டியில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

---

# துலாவூரில் கேட்டவை !

துலாவூர் ஆதீனம் 1100 ஆண்டுகட்கு முற்பட்டது. இங்கு நடைபெற்ற முத்து விழாவின்போது நித்திய பூஜை நிரந்தர நிதிக்கு ரூ. 101/– வீதம் நன்கொடை பெறத் தொடங்கினோம். இதுவரை 700 பேர் அதில் சேர்ந்துள்ளனர். டெபாசிட் தொகையிலிருந்து கிடைக்கும் வட்டிப் பணத்திலிருந்து இங்கு தினமும் பூஜைகள் நடைபெற்று வருகின்றன.

— 'காசிஸ்ரீ' அரு. சோ.

சைவ ஆதீனங்கள் 18ல் துலாவூரும் ஒன்று. தாய்மார்கள் இந்த ஆதீனத்தைக் காப்பாற்றி வந்திருக்கிறார்கள். அவர்களால்தான் சமயம் நிற்கிறது மாதா, பிதாவுக்கு அடுத்தபடி குருவே தெய்வம். குருபீடம் நன்றாக இருந்தால்தான் நாமும் நன்றாக இருக்க முடியும். தேவாரம் என்பது சத்திய வாக்கு. அந்தக் காலத்தில் 5 வயதில் உபதேசம் கேட்டுக் கொண்டார்கள். இப்போது மணி விழாவிற்கு முதல் நாள் கேட்கப் பார்க்கிறார்கள்.

— அழ அரு. சோம. நாராயணன் செட்டியார்

பல சமய நிறுவனங்கள் பாதுகாக்கப்பட வேண்டிய நிலையில் உள்ளன. குன்றக்குடியும் துலாவூரும் ஒன்றுக்கொன்று நெருங்கிய உறவு உடையவை. மோர் வித்த காசில் குன்றக்குடிக் கோவிலுக்கு ஆச்சிமார்கள் தங்கத் தேரைச் செய்து கொடுத்து உதவியிருக்கிறார்கள். பழைய மரபுகளைப் புதுப்பிப்பதில் திரு. சோம. நாராயணனும் திரு. அரு. சோ. வும் நல்ல முயற்சி மேற்கொண்டு வருகிறார்கள். பாராட்டுக்கள். இல்லற மடங்கள் நாற்றுப் பண்ணைகளாகவும் மற்ற மடங்கள் ஞானப் பண்ணைகளாகவும் மாற வேண்டும். கடமை வேறு; வேலை வேறு. முன்னோர்கள் செய்தவற்றைப் பேணிப் பாதுகாப்பது கடமை. வயிற்றோடு தொடர்புடையது வேலை.

— குன்றக்குடி அடிகளார்

(துலாவூரில் 12-10-92 அன்று நடைபெற்ற குருபூஜை விழாவில்)



சதாபிஷேக விழாக் கண்ட பெரியவர் 'அருட்பணி அண்ணல்' அழ. அழகப்ப செட்டியார் அவர்களும் திருமதி அழ. லெட்சுமி ஆச்சி அவர்களும்.

## கோவிலூரில் முத்து விழா

'அருட்பணி அண்ணல்' காரைக்குடி திரு. அழ. அழகப்ப செட்டியார் – திருமதி லெட்சுமி ஆச்சியின் சதாபிஷேக முத்து விழா கோவிலூர் ஆதீன வளாகத்தில் 30-9-92 அன்று சிறப்பாக நடைபெற்றது. அப்பொழுது நடைபெற்ற வாழ்த்தரங்கிற்குக் கோவிலூர் ஆதீனகர்த்தர் தவத்திரு காசிவிஸ்வாத ஞானதேசிக சுவாமிகள் தலைமை தாங்கினர்கள். துலாவூர் ஆதீனகர்த்தரும் பாதரக்குடி ஆதீனகர்த்தரும் ஆசி கூறினர். காசிஸ்ரீ திரு. அரு. சோமசுந்தரன் இரசிகமணி திரு. இராம. சிதம்பரம் செட்டியார், கவிஞர்கள் திரு. சுப. சுந்தரம், திரு. மீனவன் புலவர் திரு. இராம. வீரப்பன், திரு. நா. சுப்பிரமணியன் புலவர் மாமணி திரு. மா. முத்துராமன் சித. உமையாள் ஆச்சி ஆகியோர் வாழ்த்திப் பேசினர். மகன் திரு. அழகப்பன் வரவேற்க, பேரன் திரு. கீர்த்திவாசன் நன்றி கூறினர்.

உ

ஸ்ரீ கற்பக விநாயகர் சகாயம் — ஓம் ஸ்ரீ ஐயப்பன் துணை

SUBAM TRAVEL AGENCY

# சுபம்

## டிராவல் ஏஜன்ஸி

226, நாயக்கர் புதுத்தெரு, மதுரை-1. ☎ 22712

# சபரிமலைப் பயணம்

3 நாட்கள் பிரயாணம் : மதுரை-குற்றாலம்-ஆரியங்காவு-பந்தளம்-ஆரன்முலா - எருமேலி (தங்கல்) - பம்பை - சன்னிதானம் (தங்கல்) - செங்கோட்டை – மதுரை.

29–11–92 To 1–12–92 ; 6–12–92 To 8–12–92
9–12–92 To 11–12–92 ; 12–12–92 To 14–12–92
15–12–92 To 17–12–92 ; 18–12–92 To 20-12–92
21–12–92 To 23-12–92 ; 24–12–92 To 26–12–92
1– 1 –93 To 3– 1–93 ; 4– 1-93 To 6– 1–93
8– 1–93 To 10– 1–93 ; 17– 1–93 To 19– 1–93

மேற்கண்ட 3 நாட்கள் பயணத்திற்கு பஸ் கட்டணம், தங்கும் வசதி, காலை டிபன்-காபி, பகல் சாப்பாடு, மாலை ஸ்வீட்-காரம்-காபி, இரவு ஆகாரம் உள்பட நபர் 1க்கு ரூ 360/-
அரைக் கட்டணம் 3 முதல் 8 வயதிற்குள் ரூ. 285/-

---

4 நாட்கள் பிரயாணம் (குருவாயூர் வழி)

மதுரை - பழனி or திருமூர்த்தி மலை - குருவாயூர் (தங்கல்) - திருப்பரயாறு–கொடுங்களூர் - காலடி–சோட்டாணிக்கரை–வைக்கம் – ஏட்டுமானூர் - எருமேலி (தங்கல்) - பம்பை -சன்னிதானம் (தங்கல்) - செங்கோட்டை - மதுரை

22–11–92 To 25–11–92 ; 9–12–92 To 12-12–92
19–12–92 To 22–12–92 ; 23–12–92 To 26–12–92
31–12-92 To 3– 1–93 ; 4– 1–93 To 7– 1–93

மேற்கண்ட 4 நாள் பிரயாணத்திற்கு பஸ் கட்டணம், 4 வேளை ஆகாரம், தங்கும் வசதியுள்பட நபர் 1க்கு ரூ 470/-
அரைக் கட்டணம் 3 முதல் 8 வயதிற்குள் ரூ. 370/-

---

4 நாட்கள் பிரயாணம் (திருச்செந்தூர் வழி)

மதுரை - திருச்செந்தூர் - கன்னியாகுமரி-சுசீந்திரம்-திருவனந்தபுரம் (தங்கல்)-வர்க்கலா-பந்தளம்-ஆரன்முலா – எருமேலி (தங்கல்) - பம்பை - சன்னிதானம் (தங்கல்) - செங்கோட்டை - மதுரை.

15–12–92 To 18–12–92 and 23-12–92 To 26–12–92

நாள் 4க்கு பஸ் கட்டணம், சாப்பாடு உள்பட நபர் 1க்கு ரூ. 470/-
அரைக் கட்டணம் ரூ. 370/-

# துலாவூரில் குருபூஜை

நகரத்தார் பெண்கள் குருபீடமான துலாவூர் ஆதீனத்தில் ஆதீன குரு முதல்வர் ஸ்ரீ நிரம்ப அழகிய தேசிக பரமாச்சாரிய சுவாமிகளின் குருபூஜை 12-10-92 அன்று சிறப்பாக நிகழ்ந்தது.

அன்று காலை துலாவூர் ஆதீன ஓதுவார் திரு. எஸ். முருகேசனும் மற்றவர்களும் தேவாரம் பாடினுர்கள் பின்னர் பேரவை நிகழ்ச்சியில் 'காசிஸ்ரீ' திரு. அரு. சோமசுந்தரன் வரவேற்புரை நிகழ்த்த, திரு. அழ. அரு. சோம. நாராயணன் செட்டியார் உரையாற்றினுர்கள்.

விழாவில் இவ்வாண்டு பாகனேரி திரு. இராம. முத்துப் பழநியப்ப செட்டியாருக்கு துலாவூர் ஆதீனத்தின் சார்பில் 'அறமனச் செம்மல்' எனும் பட்டத்தினை தவத்திரு ஞானப் பிரகாச தேசிக சுவாமிகள் வழங்கிச் சிறப்பித்தார்கள்.

தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் ஆசியுரை வழங்க தொழிலதிபர் திரு. லெ. நா., பேராசிரியர் முனைவர் திரு. ச. மெய்யப்பன் பேராசிரியர் திரு. சொ. சொ. மீ. சுந்தரம் ஆகியோர் பாராட்டுரை வழங்கினர்.

கோவிலூர் சுவாமிகள் ஆசியுரை வழங்கினுர்கள். இவ்விழாவில் கலாமடம் பாதரக்குடி ஆதீனம் தவத்திரு இரவீந்திர சுவாமிகளும் காளையார் கோவில் கா. செ. மடாலயம் தவத்திரு சிவானந்த சுவாமிகளும் கலந்து கொண்டனர்.

பகல் 11-30 மணி அளவில் மங்களாம்பிகை உடனுய வாஞ்சீசுவரப் பெருமானுக்கு அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றன.

மாலை 4-00 மணி அளவில் காசிஸ்ரீ திரு. பாலசுந்தரம், திரு. பழ. இராமசாமி, திரு. சுப. நாராயணன், திரு. மாயாண்டி திரு. சுப. சுந்தரம் 'தாலாட்டு' திரு. T குமரப்பன், திருமதி சோம. நீலாவதி ஆச்சி, செல்வி சோம. மங்கையர்க்கரசி மீனு, தில்லை ஆச்சி, வள்ளியம்மை ஆச்சி போன்றவர்கள் பக்திப் பாடல்கள், தாலாட்டுப் பாடல்களைப்பாடினர்.

இரவு ஆதீனத் தலைவர் கொலு வீற்றிருந்தார். இரவு 10-00 மணி அளவில் ''வீரபாண்டிய கட்டப் பொம்மன்'' நாடகம் நடைபெற்றது.

## கோவிலூரில் சிந்தனைப் பூங்கா

கோவிலூர் ஆதீனத்தின் சார்பில் சிந்தனைப் பூங்காவின் 14 ஆவது கூட்டம் 10-10-92 அன்று காலை சிறப்பாக நிகழ்ந்தது. கோவிலூர் ஆதீனகர்த்தர் தவத்திரு காசிவிஸ்வநாத ஞான தேசிக சுவாமிகள் தலைமை தாங்கி ஆசி கூறினுர்கள். காசிஸ்ரீ திரு. அரு. சோமசுந்தரன் வரவேற்றுர். பேராசிரியர் திரு. நா. சுப்பிரமணியன் ''மாணிக்கத் தீங்கனி'' எனும் தலைப்பில் சிந்தனை உரை ஆற்றினுர்.

# அனுபவமே அறிவின் உண்மைகள்

பிறப்பிலிருந்து இறப்பு வரை நாம் வாழ்க்கையில் பற்பல அனுபவங்களைச் சந்திக்கிறோம். இந்த அனுபவங்களை இன்ப மென்றும், துன்பமென்றும் நமது புத்தி நிர்ணயம் செய்கின்றது. அனுபவத்தில் வருகிற எதையுமே நம்மால் எளிதில் மறுந்துவிட முடியாது. ஏனென்றால் அந்த அனுபவமானது உண்மையான அறிவாக நம்முள் பதிந்து விடுகின்றது.

வாழ்க்கையில் நாம் அனுபவிக்கின்ற சுய அனுபவம் மட்டுமே, அறிவின் உண்மையான நிலையாகும். 'மாம்பழம் இனிப்பாக இருக்கின்றது' என்று எத்தனை முறை நாம் கேட்டாலும் அதிலிருந்து உண்மையான அறிவு நமக்குக் கிட்டுவதில்லை. அதே மாம்பழத்தை நாம் உண்ணும்போது நாம் புரிந்து கொண்ட 'இனிப்பு' என்ற சுவை, உண்மையான அனுபவமாக மாறுகின்றது.

புத்தகப் படிப்பால் மட்டும் அறிவை நாம் வளர்த்துக் கொள்ள முடியாது. அது தூண்டுகோலாக அல்லது அனுபவத்திற்கு நம்மை ஏற்றிச் செல்லுகின்ற ஏணியாகப் பயன்படுகிறது.

சாஸ்திரங்களில் அறிவை இரண்டாகக் கூறுகின்றனர். முண்டக உபநிடத்தில் இரண்டு விதமான ஞானத்தைப் பற்றிக் கூறுகின்றனர். இவைகளை 'அபரா' என்றும் 'பரா' என்றும் கூறுகிறார்கள். 'அபரா' என்பது உலகத்திலிருக்கின்ற அனைத்து விஞ்ஞானங்களையும் தன்னுள் அடக்கிக் கொள்கிறது. ஆனால் 'பரா' என்பதோ இந்த அனைத்து விஞ்ஞானங்களுக்கும் அடிப்படையாக உள்ள உயிர் அனுபவத்தைப் பற்றிக் கூறுகின்றது.

அறிவு மனிதனைப் பக்குவப்படுத்தி உயர் நிலைக்குக் கொண்டு செல்ல உதவினால்



அது அனுபவமாக மாறிவிடும். அந்த அனுபவம்தான் உண்மைகள்.

அனுபவம் என்ற சொல், உண்மையான அறிவாக மாறுவது உயிர் உணர்வைத் தூண்டும் போது மட்டுமே! சிந்தனை செய்வதற்காக நாம் பயன்படுத்தும் கருவி தான் புத்தி. புத்தகங்கள் படித்தும் மற்றவர்களிடமிருந்து கேட்டும் பல விசயங்களை நாம் கற்றுக் கொள்கிறோம். அப்படி நாம் புத்தியில் சேமித்து வைக்கின்ற விவரங்கள் அனுபவமாக மாற்றப்படும்போது மட்டும் தான் உண்மையான அறிவை நாம் பெறுகிறோம்.

நீச்சலடிப்பதைப் பற்றி ஒருவன் தனக்குக் கிடைக்கின்ற புத்தகங்களை வாங்கிப் படிப்பதுடன், தெரிந்தவர்களிடமும் கேட்டு அறிந்து கொள்கிறான். ஆனால் தண்ணீரில் இறங்கிக் கற்றுக் கொள்ளாமல் நீச்சலைப் பற்றிய உண்மையான அனுபவத்தை அவன் பெற முடியாது.

புத்தி, உன்னதமான சிந்தனைகளை விரைவில் சேமித்து வைக்கக் கூடிய ஆற்றல் உடையது. ஆனால் மனம் அதை ஏற்றுக் கொள்ளாவிட்டால் அனுபவத்தில் உண்மையான அறிவைப் பெற முடியாது. இதற்கு மனதை ஒருமுகப்படுத்த வேண்டியது மிக மிக அவசியம்.

மனதை ஒருமுகப்படுத்துகின்ற பயிற்சி அறிவொழுக்கத்திற்கு அடிப்படை. மனம் போன போக்கில் போகாமல் மனதை பக்தி, பஜனை நாமஜெபம், ஜெபம் இவ்வழிகளில் திருப்பி அகங்காரம், விருப்பு, வெறுப்புகளுக்கு இடம் கொடாமல் பக்குவம் பெற்று பற்றற்ற முறையில் ஆன்மீக முன்னேற்றப் பாதையில் செல்வது அறிவொழுக்கமாகும், அறிவொழுக்கத்தின் முக்கிய பயன் தெய்வீக உலகோடு தொடர்பு கொள்வதும், நம் அன்றாட வாழ்வில் நற்காரியங்களைச் செய்வதும், பிற்பயனை அடைவதும் நோக்கமாக இருக்க வேண்டும்.

ஒரு பொழுதும் நடந்தவைகளை நினைத்து வருந்தாதீர்கள். அது உங்களைப் புண்படுத்தும். வரப்போகும் நிகழ்ச்சிகளைப் பற்றிக் கோட்டை கட்டாதீர்கள். 'நடந்தவை நம் வினைப்பயன்' என்று நினையுங்கள். நடப்பது நடந்தே தீரும். இறைவன் ஆணைப்படி தான் யாவும் நடக்கும் எப்பொழுதும் பிறரை மகிழ்விக்கும் அன்பு வழியில் செல்லுங்கள். அவர்களுடைய மகிழ்ச்சியில் உங்கள் மகிழ்ச்சியைக் காணலாம். அன்றாடம் காரியத்தில் கண்ணும் கருத்துமாக இருந்து அவைகளை நல்ல முறையில் செயல்படுத்த முயற்சியுங்கள். தாயின் திருவருளைக் கொண்டு நிச்சயம் வெற்றி பெறுவோம் என்பதைத் திடமாக எண்ணுங்கள். வெற்றி, திருவருளால் நிச்சயம் நடக்கும். ஐந்து அறிவோடு மெய்யாகிய ஆறாவது அறிவைக் கூட்டி பழகப் பழக அன்பு பெருகி, ஒழுக்கம் நிறைந்து, தர்மம் தழைத்து அமைதி வழி செல்ல எளிதாகும்.

(கோவிலூரில் 5—9—92 அன்று நடைபெற்ற 'சிந்தனைப் பூங்கா' நிகழ்ச்சியில் கோவிலூர் ஆதீனகர்த்தர் தவத்திரு காசி விசுவநாத ஞானதேசிக சுவாமிகள் வழங்கிய ஆசியுரை)

## திருமணம்

வலையபட்டி திரு. ஆ பழ. குமரப்ப செட்டியார் பேத்தியும் திரு. பழநியப்ப செட்டியார் புதல்வியுமான செல்வி உமைமாள் என்கிற உமா M.Sc. க்கும் பொன் புதுப்பட்டி திரு. சுப. சோம. அண்ணாமலை செட்டியார் புதல்வன் செல்வன் சுப்பிரமணியன் B.E. க்கும் 30-8-92 அன்று வலையபட்டியில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

1971இல் காரைக்குடி ஆடவர் கழக ஆண்டு விழாவில் கவியரசர் முன்னிலையில் முனைவர் அர. சிங்காரவடிவேலன் அவர்கள் பாடியவை :

[ ''நினைக்கத் தெரிந்த மனமே !- உனக்கு மறக்கத் தெரியாதா '' என்ற கவியரசரின் திரைப்படப் பாடல் மெட்டு ]

குடிக்கத் தெரிந்த வாயே ! - உனக்குக்
குமட்டத் தெரியாதா?
நனையத் தெரிந்த உதடே ! - உனக்கு
உலரத் தெரியாதா?

பாடத் தெரிந்த தலைவா ! - உனக்குப்
பாதை தெரியாதா?
போடத் தெரிந்த தலைவா ! – உனக்குப்
போதை தெளியாதா?

போதை தெளிய வேண்டும் – உனது
புலமை தொடர வேண்டும்
பாதை விலக வேண்டும் - எமக்குப்
பாடும் பறவை வேண்டும்

விருதுநகர் செந்திற்குமார நாடார் கல்லூரி வெள்ளி விழாக் கவியரங்கில் (19–8–73 அன்று) முனைவர் அர. சி., முன்னிலை வகித்த கவியரசரைப் பாடியது :

கொட்டிவைத்த முத்தோ ! குவித்துவைத்த இரத்தினமோ !
கட்டிவைத்த பூச்சரமோ கவியரசர் பிள்ளைமனம்?
மையை நிரப்புவரோ? மழையை நிரப்புவரோ?
கையால் எழுதுவரோ? காலாலும் எழுதுவரோ?
வையை பெருகியதோ? வானே உருகியதோ ?
ஐ ! என்ன இவர் வாயில் ஆனை நடக்கிறதோ?
வாயைத் திறந்தவுடன் வந்துவிழும் சந்தமழை
தாயார் திருவயிறு தாங்கியதும் எந்தவிதம்?
வாங்கக் குடம்நிறைக்கும் வள்ளற் பெரும்பசுவே!
பாங்கனென நான்வரவே பரிந்துரைத்த தாய் மனமே !
தடைபோட்டு வைத்தாலும் தாவிவரும் காவிரியே !
மடைவெள்ளம் உன் முன்னே வாய்க்கால் வணங்குகிறேன்.

கவியரசரைப் பாடியவற்றுள் முனைவர் அர. சி க்கு மிகவும் பிடித்தவை

கூடலிலே பிறப்பெடுத்தான் : பட்டி விட்டுக்
குடியடுத்துக் கோமகனாய் வளர வந்தான்
பாடலிலே அவனுக்கு வியாழ நோக்கம்
பட்டினத்தை ஆதலினால் மணந்து கொண்டான்
ஆடலிலே வல்லவனாய் இருந்த தாலே

அடுத்தவர்க்கும் மருமகனாய் ஆகி விட்டான்
தேடரிய புகழாளன் கண்ண தாசன்
செந்தமிழன் என்றாலும் உலகச் சொத்து
பளபளப்பாய்ப் பார்ப்பவர்க்குத் தெரிந்த போதும்
பாவேந்தன் அவன்வாழ்வில் அமைதி இல்லை
தொளதொளப்பாய்த் தாலிகளைக் கட்டி விட்டான்
தொட்டிலுக்கும் கட்டிலுக்கும் ஓய்வே இல்லை
மளமளப்பாய்ப் பணம் காசு வந்த போதும்
வரவுக்கு மிஞ்சிவிட்ட செலவி னாலே
தளதளக்கும் உலைபோலத் தவித்துப் போனான்
தனிவாழ்வில் கவியரசன் ஏழை யானான்

---

## கண்ணனின் அவதாரம்

ஓ ! மகாகவியே !
நீ
கண்ணனுக்குத் தாசன் என்ருய்!
ஆனல்
நான் சொல்கிறேன் :
நீ
கண்ணனுக்குத் தாசன் அல்ல !
கண்ணனின் அவதாரமே என்று !
ஏன் தெரியுமா?
கண்ணன்
அவன் பெற்ருேருக்கு
எட்டாவது பிள்ளை !
நீயும்
உனது பெற்ருேருக்கு
எட்டாவது பிளளை !
கண்ணன்
பிறந்தது ஓரிடம்;
வளர்ந்தது மற்ருேரிடம் !
அதுபோல்
நீ பிறந்தது சிறுகூடல்பட்டியில்;
வளர்ந்தது காரைக்குடியில் !
கண்ணனுக்குப் பல தாரங்கள்.
உனக்கும் பல தாரங்கள் !
கண்ணன்
புல்லாங்குழலால் உலகை
மயக்கினுன்.
நீயோ
எழுதுகோலால் உலகை
மயக்கினுய்.
கண்ணன்
வாய்க்குள் இந்த உலகத்தைக்
காட்டினுன்.
நீயோ
உலகத்தார் வாயெல்லாம்



உன் பாடலை இசைக்க வைத்துக்
காட்டினுய்.
அதனுல்தான் சொல்கிறேன் :
நீ
கண்ணனுக்குத் தாசன் அல்ல !
கண்ணனின் அவதாரமே என்று!

— கவிஞர் சிவல்புரி சிங்காரம்
கீழச்சிவல்பட்டி

# கண்ணதாசன் பதில்கள்

(வாசகர்களின் கேள்விகளுக்கு கவியரசர் கண்ணதாசன் அளித்த பதில்கள் 1981 ஆம் ஆண்டு ''இதயம் பேசுகிறது'' இதழ்களில் வெளிவந்துள்ளன. அவற்றில் சிலவற்றை இங்கு வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகிறோம்)

கேள்வி : யாருடைய எழுத்துக்கள் உங்களை அதிகம் சிந்திக்க வைத்திருக்கின்றது?

பதில் : காஞ்சிப் பெரியவருடைய எழுத்துக்கள்.

கே : பெண் கொசுக்கள் மனித இரத்தத்தைக் குடிக்கிறதாம். ஆண் கொசுக்கள் தாவரத்தை உணவாக்கிக் கொள்கிறதாம். இது எதைக் குறிக்கிறது?

ப : மனித ஜாதியிலும் பெண் தானே கணவனைப் பிடுங்கித் தின்கிருள். அவர்கள் போட்டதைத் தின்று வாழும் ஜீவன்களாகத்தானே ஆண்கள் இருக்கிருர்கள்! கடவுள் ஆண்மையின் இடுப்பை முறிக்கவே பெண்மையைப் படைத்தான்.

கே. உங்களுடைய கருத்துக்களுக்கு அடிப்படையாக இருந்து சிந்திக்க வைத்தவை எவை?

ப. வறுமை, வசதியின்மை, ஊராரின் கேலிப்பேச்சு - இம் மூன்றுமே!

கே : தங்களுக்கு எப்போது கோபம் வரும்?

ப: நான் எழுதும்போது யாராவது சத்தம் போட்டால் – பசியோடு வீட்டிற்கு வரும்போது சாப்பாடு சரியாக இல்லாவிட்டால்

கே. பெண்களையே கவிதை வடிக்கிறீர்களே? எங்கே ஆண்களைப் பற்றிச் சிறுகவிதை பாடுங்கள் ...?

ப : என்னுடைய மூதாதையரை விட நான் கெட்டிக்காரன் அல்ல. 'ஆண்' என்பவனே அபத்தம். அவனைப் பற்றிப் பாடுவதற்கு என்ன இருக்கிறது?

கே : பாரதியார்-இரவீந்திரநாத் தாகூர் - உமர்கய்யாம்-அல்லாமா இக்பால் ஆகியோரது கவிதைகளின் தனித் தன்மைகளை ஒப்பிடுக?



ப. பாரதி தரையிலே நடந்தான். தாகூர் ஆகாயத்தில் மிதந்தார். உமர்கய்யாம் திராட்சைத் தோட்டத்தில் தனியாக உலாவினன். இக்பால் அன்ருட உணர்ச்சிகளில் விளையாடினன்.

கே : ஜோதிடம் கற்றுக் கொடுக்கப்படும் என்பதைப்போல், 'பாடல் எழுதக் கற்றுக் கொடுக்கப்படும்' என்று அறிவித்து நீங்கள் செயல்பட்டால் என்ன?

ப : சில விஷயங்கள் கற்றுக் கொடுத்து வருவதல்ல. இலக்கணத்தைச் சொல்லிக் கொடுக்கலாம். கற்பனையை எப்படி மண்டைக்குள் திணிப்பது? அது முடியுமானல், ஒரு பள்ளிக்கூடம் வைத்தே சம்பாதித்து விடுவேனே!

கே : அரசியல் மேடைக்கும், இலக்கிய மேடைக்கும் என்ன வித்தியாசம்?

ப : அரசியல் மேடை, மனிதனை முட்டாளாக்குவதற்காகப்போடப் படுவது; இலக்கியமேடை முட்டாள்தனத்தைத் தெளிய வைப்பதற்காகப் போடப்படுவது!

கே : பெண்கள் பூமியைப் பார்த்தே நடக்க வேண்டுமென்று தமிழ்ப் பண்பு விதி வகுத்தது ஏன்?

ப : அது கோஷா போடாத பாதுகாப்பு! அவள் கண்கள் எதன் மீதும் பட்டு கெட்டுப் போகக் கூடாதே என்பதற்கான ஏற்பாடு!

கே : பெண் - கவிதை இரண்டையும் ஒப்பிடுங்கள்?

ப : பெண் எப்போதும் அனுபவிக்கத் தக்கவள்; கவிதை ஓய்விருக்கும்போது மட்டுமே!

கே : நீங்கள் குறுகிய நேரத்தில் எழுதிய பாடல் எது?

ப : ''நெஞ்சில் ஓர் ஆலயம்'' படத்தில் வரும் 'முத்தான முத்தல்லவோ' பாடல்.

கே : ஒரு கவிஞன் தலை நிமிர்ந்து பெருமைப்பட்டுக்கொள்ள முடிவது எப்போது?

ப : அவன் நினைக்காத ஒன்றை அவனது எழுத்துக்களிலிருந்து மற்றவர்கள் எடுத்துக் காட்டும் போது ... ...

கே : கடவுளிடம் நீங்கள் பெற்ற பெரிய பாக்கியமாக எதைக் கருதுகிறீர்கள்?

ப : என்னை அங்கஹீனமில்லாது ஒழுங்காகப் படைத்ததை!

கே : காதலைப்பற்றி புதிதாக ஏதேனும் சொல்ல முடியுமா?

ப : காதல் சினிமாவைக் கெடுப்பதற்கென்றே இறைவனல் அனுப்பப்பட்ட மாயை!

நன்றி : ''இதயம் பேசுகிறது''



# தத்துவதாசன்

செந்தமிழ்த் திலகம்

**செல்வி என். சரசுவதி B. Sc , B. L.**

காரைக்குடி

இருபதாம் நூற்றாண்டில் இலக்கிய வானில் துருவ நட்சத்திரமாகத் திகழ்ந்தவர்களுள் பாரதியார், பாரதிதாசனுக்குப் பிறகு 'கவிஞன்' என்றால் அது கண்ணதாசன்தான்! செட்டி நாட்டில் சிறுகூடல்பட்டியெனும் சிற்றூரில் விளைந்த முத்து. ஓதாது உணர்ந்த வள்ளல் பெருமானுக்கு அம்பிகை ஞானப்பால் அமுதூட்டியதுபோல அறியாச் சிறுவன் முத்தையாவுக்கு அன்னை மலையரசி ஞான அமுதூட்டியதால் தமிழுலகுக்கு ஒரு பெரிய கவிஞனாகத் தந்தாள். காரைக்குடிக்கு பிளைவந்த முத்தையா அன்னை கொப்புடையாளின் அருட் பார்வையாலே அறிவார்ந்த கவிஞராகச் சுடர்விட்டார். அவர் தொட்டுத் துலங்காத துறையே இல்லை! எந்தத் துறையைத் தொட்டாலும் அவற்றை முடிக்காமல் விட்டதில்லை. காதல் பாடல்களில் தொடங்கி ஞான மார்க்கத்தின் வரை பாடிச் சென்றவர்.

கவிஞன் என்பான் காலத்தை நிர்ணயிப்பவன்; யானோர் காலக் கணிதம்; கருப்படு பொருளை உருப்பட வைப்பவன்; காலத்தைப் பிரதிபலிக்கின்ற கண்ணாடி என்பதை உணர்த்தும் பொருட்டு தலைவர் மாறலாம்; தர்பார் மாறலாம்; தத்துவம் மட்டும் அட்சய பாத்திரம் என்று தத்துவத்தை எடுத்துரைத்தவர். கவிஞர்கள் என்பவர்கள் உணர்ச்சி வசப்படக்கூடியவர்கள். ஒரே மனநிலையில் இருப்பதில்லை. கற்பனை வானில் சிறகடித்துப் பறந்து கொண்டிருக்கின்ற காரணத்தால்–



''மனிதன் என்பவன் வனவிலங்கல்ல
மாற்றம் எனது மானிடத் தத்துவம்''

என்று அழகாகச் சொல்லிச் சென்றவர் கவியரசர்.

திரைப்பட உலகில் 30 ஆண்டுக்கால வாழ்வில் இனிமேல் யாராலும், எவராலும் இந்த அளவிற்கு எழுத முடியாது என்கின்ற பட்டயத்தைப் பொறித்

துச் சென்றவர். திரைப்பட உலகில் கவிஞர் காலடி எடுத்து வைத்த பின்புதான் பாடல்களுக்கே புதுவடிவம் கிடைத்தது. திரையரங்குகள் பாடல்பெற்ற தலமாகவே மாறின. திரை இசைப் பாடல்கள் என்பது மெட்டுக்காக எழுதப் படுவது இல்லை. அதுவும் இலக்கியம் தான் என்கின்ற புதிய அந்தஸ்த்தை ஏற்படுத்தியவர். அவருக்கு முன்னால் திரை உலகம் வடமொழிக் கலப்பால் தமிழை மறைத்துக் கொண்டிருந்த நேரத்தில்தான் கவிஞர் அவர்கள் இலக்கிய நயம் சொட்ட, மாடி மஞ்சங்களில் இருந்த தமிழை பாமார்கள் மத்தியிலே கொண்டு வந்தார்கள். புரியாத புதிராக இருந்த சங்கப் பாடல்களுக்குப் புது விளக்கம் தந்தவர். திரைப்படங்களில் சூழ்நிலைக்கு ஏற்ப, நடிகர்களுக்கு ஏற்ப, கதை ஓட்டத்திற்கு ஏற்ப எழுதக் கூடிய பாடல்களில் கூட தன்னுடைய அனுபவத்தை, தன்னுடைய துயரத்தை எழுதியவர்.

பட்டினத்தடிகளுக்குப் பின்னால் தத்துவத்தை மிகத் தெளிவாக எடுத்துச் சொல்லிய பெருமை கவியரசர் ஒருவருக்குத் தான் உண்டு.

''அத்தமும் வாழ்வும்
அகத்துமட்டே''

என்ற பட்டினத்தாரின் பாடலை திரைப்படத்திலே எளிமைப் படுத்தியதோடு,

''வீடு வரை உறவு
வீதி வரை மனைவி
காடு வரை பிள்ளை
கடைசி வரை யாரோ''

என்ற பாடலின் மூலம், எத்தனை பணம் இருந்தாலும், வாழ்க்கை வசதி இருந்தாலும், பெரிய பதவியில் இருந்தாலும், பட்டம் பெற்று இருந்தாலும் படிக்காத பாமரராக இருந்தாலும் நாம் போய்ச் சேருகின்ற இடம் ஒன்றுதான். எனவே வாழ்கின்ற காலத்திலே நேர்மையுள்ளவனாக இரு.; மற்றவர்களுக்கு வாழ்க்கையில் முன் மாதிரியாக இரு; உண்மையைச் சொல். கள்ளம் கபடு இல்லாமல் இருந்தால் வாழ்க்கையில் உயர்வாய் என்பதை எடுத்துரைத்தவர்

''ஆறு மனமே ஆறு - அந்த
ஆண்டவன் கட்டளை ஆறு
உண்மையைச் சொல்லி
நன்மையைச் செய்தால்
உலகம் உன்னிடம் மயங்கும்
உயரும்போது பணிவு
கொண்டால்
உயிர்கள் உன்னை வணங்கும்''

என்று பாடி ஆணவப் போக்குக் கூடாது என்பதைத் தெளிவாக எடுத்துச் சொன்னவர். கவியரசு அவர்களைத் 'தத்துவதாசன்' என்று சொல்லுவது மிகப் பொருத்தம். காதல் பாடல்களைப் பாடும்போதுகூட தத்துவத்தை இணைத்த பெருமை இவருக்கே உண்டு.

பருவம் வந்த அனைவருமே காதல் கொள்வதில்லை; காதல் கொண்ட அனைவருமே மணமுடிப்பதில்லை; மணமுடித்தும் அனைவருமே சேர்ந்து வாழ்வதில்லை சேர்ந்து வாழும் யாவருமே சேர்ந்து போவதில்லை என்று வாழ்க்கை நிலையாமையை எடுத்துச் சொல்கிறார். அரசவைக் கவிஞர் பதவிக்குப் பெருமை சேர்த்து கடைசிவரை அதைத் தக்க வைத்துக் கொண்டவர் அவர். கவியரசருடைய புகழைப் போற்றுவோமாக!




## பாலும் அடுப்பிலேதான் . . .

சிந்தாமணி சொக்கலிங்கம், தேவகோட்டை

ஓடுதாம் மேகம் ஒளிவிடுதாம் ராணிமுடி
பாடுதாம் இரண்டுகிளி பாலன் பசியறிந்து
கூவுதாம் மயில்சேவல் குழந்தை குரல்கேட்டு
அன்னம் சிறுகிளியே அழுது எடுக்கப் போகயிலே
சின்னஞ்சிறு கிளியே தினைக்கருது கொய்யயிலே
வங்காளம்சிண்டு வயல்இறங்கி மேயுதுண்ணு
சிங்கார வில்லெடுத்து திருச்செந்தூர் அம்பெடுத்து
குருவிபட எய்தாரோ குழந்தையுடைய அய்யாவும்
பட்சிபட எய்தாரோ பாலருடைய அய்யாவும்
பூக்கும் சிறுகுருவி பொழுது அந்திபட்டால் எங்கிருப்பீர் ?
புகழ் மதுரை மீனாள் பூச்சரத்தின் கீழிருப்போம்
பறக்கும் சிறுகுருவி பகல் அந்திபட்டால் எங்கிருப்பீர் ?
பார்வதியாள் சன்னதியில் பகல் எல்லாம் போயடைவோம்
கோல வர்ண நெய்க்கிளியாள் கூட்டமெல்லாம் எங்கிருப்பீர்?
குமரேசர் சன்னதியில் கூட்டத்தோடு போயடைவோம்
பஞ்ச வர்ண நெய்க்கிளியாள் மதியமெல்லாம் எங்கிருப்பீர்?
மலைபழனி ஆண்டவரின் மண்டபத்தின் கீழிருப்போம்
சின்னஞ்சிறு கிளியாள் சிலகாலம் எங்கிருப்பீர்?
தில்லை சிவகாமி அம்மன் திருவடியில் போயடைவோம்
பாலும் அடுப்பிலே தான் பாலகரும் தொட்டிலிலே
சோறும் அடுப்பிலே தான் சோழகனும் தொட்டிலிலே

பெருமைக்குரிய ஆச்சிமார்களே ! உங்களுக்குத் தெரிந்த தாலாட்டுப் பாடல்களை தாலாட்டுப் பகுதி, ''நகரத்தார் குரல்'', மதுரை-625 009 என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள். அது பலருக்கும் உதவட்டும்.

# எங்கள் நெஞ்சில் கண்ணதாசன்

(செல்வி நா. கண்ணகி B. Sc. B. Ed., ஒ. சிறுவயல்)

எண்ணச் சிறகடித்தே எண்ணற்ற கவிபடைத்து
வண்ணத் தமிழுக்கு வடிவழகைக் கூட்டிவைத்த
கண்ணதாசக் கவியரசர் கருத்துமழை சிந்துகையில்
எண்ணற்றோர் நெஞ்சத்தில் எழுச்சியினை ஊட்டியவர்

அர்த்தமற்ற சொற்களால் அலங்காரம் செய்திட்ட
வர்த்தகத் துறையான வளங்கூட்டும் திரையுலகில்
சிந்தை மயங்கவைக்கும் சிங்காரச் சொல்லழகும்
செந்தமிழ் இலக்கியத்துச் சீர்தூக்கும் நடையழகும்

முத்தமிழும் முழக்கமிட முன்னேற்றப் படிகட்டித்
தத்துவச் சிதறல்களைத் தந்திட்டார் கண்ணதாசன்
கொத்தாக அவர்தந்த கொஞ்சுதமிழ்க் கவிதைகளின்
முத்தாரம் தமிழ்த்தாய்க்கு மோகனமாய் ஒலித்ததென்பேன்

ஆபாச வரிகளினால் அலங்கோலம் செய்யாமல்
மாபாசக் கருத்துகளால் மனத்தை மகிழ்வித்தார்
பாரதிக்குப் பின்னாலே பைந்தமிழில் கவியெடுத்த
சாரதிகள் பலபேரில் சரித்திரத்தைப் படைத்திட்டார்.

கோப்பையிலே குடியிருந்தார்; கோலமயில் துணையிருந்தாள்
யாப்புகளில் மெய்மறந்தார்; யானைபலம் பெற்றுவிட்டார்;
பூப்பூவாய்ச் சொற்களினைப் புன்னகைபோல் உதிர்த்திட்டார்;
தோப்பாகி வளர்ந்திட்டார்; தொன்மையிலே எளிமைகண்டார்.

எக்கருத்தைச் சொன்னாலும் எள்ளளவும் தயங்காமல்
மூக்காடு போட்டுத்தான் மூடி மறைக்காமல்
தெள்ளத் தெளிவாகத் தெளிந்த நீரோடையாய்
அள்ளித்தான் தந்திட்டார் அகமெல்லாம் சிலிர்க்கிறது

இந்துமதப் பெருமைகளை எடுத்துரைத்த கவியரசர்
சிந்தையிலே பாகுபாடு சிறிதும்தான் கொள்ளாமல்
ஏசுவுக்கும் காவியத்தை ஏற்றமுடன் பாடிவைத்தார்
பேசரிய மதஒருமை பேணியநல் ஞானியவர்.

அனுபவத்தின் சாறெடுத்தே அள்ளி அள்ளித் தந்தமகான்
மனக்கோவில் வாழுகின்ற மாமனிதர் ஆகிவிட்டார்
காதலென்றால் இனிமைதான்; கண்களுக்குள் பனிமழைதான்;
வேதமெலாம் காதலையே வெறுத்ததில்லை என்பதனை;

இனிமையாகக் கூறிவைத்தே இதயத்தை ஈர்த்திட்ட
இனியவரின் சொற்களினால் இனிமைக்கே இனிமைதந்தார்

நல் வாழ்த்துக்கள் !

# ஓரியண்ட் PVC பைப்ஸ்
# அருண் HDPE பைப்ஸ்

**orient**
RIGID PVC PIPES

**ARUN**
HDPE PIPES

விவசாயம்,தொழிற்சாலை,போர்வெல் மற்றும் வீட்டு உபயோகங்களுக்கு சிறந்த PVC&HDPE பைப்புகள்

- விலை குறைவு.
- தரம் உயர்வு.
- நீடித்த உழைப்பு.
- ISI பைப்புகளுக்கு நிகரானவை.




தயாரிப்பாளர்கள் :
**சேலம் பைப்ஸ் (பி) லிமிடெட்,**
27,சேலம் கூட்டுறவு தொழிற்பேட்டை லிட்,
உடையாப்பட்டி ,சேலம்-636140.
☎ 68717

கிடைக்குமிடம் :
**சேலம் பைப் டிரேடர்ஸ்,**
4,சிட்டுக்கோவில் தெரு,
சேலம் - 636001.
☎ 65038 , 67941

Sales Depot : Phone : 36946

## Salem Pipes (P) Ltd.

Kings Complex
343, Dr. Nanjappa Road, Coimbatore-641 018

Our Sister Concern :

## Visu Pipes & Fittings (P) Ltd.

Regd. Office : 4, CHITTU KOIL STREET, SALEM-636 001

தனிமையிலே வாடுகின்ற தளிர்க்கொடிகள் சருகாகி
இனிமையினை இழப்பதனை இதயத்தால் எதிர்த்திட்டார்

''புல்லாங் குழல்கொடுத்த மூங்கில்களே எங்கள்
புருஷோத்த மன்புகழைப் பாடுங்களேன்'' ... என்றெல்லாம்
சொல்லால் சுகமளித்துச் சுதந்தரமாய் இசைக்கவைத்த
வல்லவனே கண்ணதாசன்; வாழ்கின்றார் நெஞ்சமெலாம் !

''உள்ளம் என்பது ஆமை; அதில் உண்மை என்பது ஊமை;
சொல்லில் வருவதுபாதி; நெஞ்சில் தூங்கிக் கிடப்பது நீதி''
''பாதிமனதில் தெய்வமிருந்து பார்த்துக்கொண்டதடா,
மீதிமனதில் மிருகமிருந்து ஆட்டிவைத்ததடா''-என்று

மனிதனைப் படம்பிடித்தார்; மனத்திரையை நீக்கிவைத்தார்
இனிமையே வேண்டுமென்றார்; இதயத்தைச் சலவை செய்தார்;
கனிவையே கவிதையாக்கி கங்கையாய்ப் பாயவிட்டார்
புனிதனாய் ஆவதற்குப் பொலிவான கருத்தளித்தார்

கல்லூரிப் படியேறிக் கற்காத கவியரசர்
கல்லாத மக்களுக்கும் கற்றறிந்த பெரியோர்க்கும்
சொல்லூறி வரும்கவியால் சொர்க்கத்தைக் காட்டிவைத்தார்
எல்லோரும் போற்றுமாறு இதயத்தில் நிலைத்துவிட்டார் !


---

# கவியரசர் கண்ணதாசன்

கவியரசர் கண்ணதாசன் இராமநாதபுரம் மாவட்டம் சிறுகூடல்பட்டியில் பிறந்தவர். பிறந்த இடத்தில் அவரது பெயர் முத்தையாவாகும். தந்தை–சாத்தப்ப செட்டியார். தாயார் - விசாலாட்சி ஆச்சி. அவர் காரைக்குடிக்கு சுவீகாரம் சென்றார். அங்கு அவரது தந்தையின் பெயர் அ. நா. பழநியப்ப செட்டியார். தாயாரின் பெயர் தேனம்மை ஆச்சி என்பதாகும்.

கவியரசர் 24-6-1926ல் பிறந்தார். 17-10-1981ல் இயற்கை எய்தினார். அவர் வாழ்ந்தது 55 ஆண்டுகள் 3 மாதங்கள் 23 நாட்கள் மட்டுமே. கவியரசர் மாத்தூர்க் கோவில் அரும்பாக்கூர் பிரிவைச் சேர்ந்தவர்.

கவியரசர் சுமார் 5000க்கும் மேற்பட்ட திரைப் படப் பாடல்களையும் 4000 க்கும் மேற்பட்ட தனிக் கவிதைகளையும் 100 க்கும் மேற்பட்ட சிறு கதைகளையும் 30 க்கும் மேற்பட்ட நாவல்களையும் படைத்துள்ளார். அவர் எழுதியுள்ள ''வனவாசம்'' ''மனவாசம்'' ஆகியவை சுய சரிதையைப் பற்றியவை. அவர் எழுதிய ''சேரமான் காதலி'' சரித்திர நாவல் இந்திய அரசின் சாகித்ய அகடமி பரிசு பெற்றுள்ளது. அவர் எழுதியவற்றில் குறிப்பிடத்தக்கவை ''அர்த்தமுள்ள இந்துமத''மும் ''இயேசு காவி'' யமும்.



மதுரையில் 2–10–92 அன்று நடைபெற்ற நகரத்தார் இளைஞர் தின விழாவில் 1992 ஆம் ஆண்டின் சிறந்த நகரத்தார் இளைஞருக்கான விருதை வழக்கறிஞர் திரு. பழ. இராமசாமிக்கு திரு. உ. மு. சுப. லெ. அழகப்ப செட்டியார் வழங்கிய காட்சி.

---

# நகரத்தார் இளைஞர் தின விழா!

நகரத்தார் புத்தக வங்கியின் நான்காம் ஆண்டு நிறைவு விழாவும் நகரத்தார் இளைஞர் தின விழாவும் 2–10–92 மாலை மதுரை ராஜா முத்தையா மன்றத்தில் சிறப்பாக நடைபெற்றது.

விழாவிற்கு நகரத்தார் இளைஞர் சங்கத் தலைவர் திரு. இரா. சொக்கலிங்கம் தலைமை ஏற்றார்.

செல்வி சொ மீனாட்சி இறை வணக்கம் பாட செம்பனூர் திரு. என். மாணிக்கம் செட்டியார் குத்துவிளக்கேற்றி விழாவினைத் தொடங்கி வைத்தார்.

இவ்விழாவில் 1992 ஆம் ஆண்டின் சிறந்த நகரத்தார் இளைஞருக்கான விருதை வழக்கறிஞர் திரு பழ. இராமசாமிக்கு 'நாநயா' வின் தலைவர் தேவகோட்டை திரு. உ. மு. சுப. லெ. அழகப்ப செட்டியார் வழங்கிச் சிறப்பித்தார்.

இவ்விழாவில் "ஜெமினி சினிமா" நிர்வாக ஆசிரியர் திரு. பழநியப்பன் இராமசாமி, திரைப்படத் தயாரிப்பாளர் திரு. பழ. கருப்பையா, திரு. ஏ. திருநாவுக்கரசு தொழிலதிபர்கள் திரு. ஏஎல். பெரியகருப்பன் திரு. அரு. சோமசுந்தரம், பேராசிரியர் திரு. சொ. சொ. மீ. சுந்தரம் வங்கி அதிகாரிகள் திரு. எஸ்பி. மாணிக்கம், திரு. சேவு. வைத்தியநாதன் மற்றும் திரு. எம். சிஎன். மாணிக்கம், திரு. பி. எஸ். ஆர்எம். ஏ. இராமசாமி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

சிறந்த நகரத்தார் இளைஞர் விருது பெற்ற திரு. பழ. இராம சாமி ஏற்புரை நல்கினர்.

பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு திரு. ஏ. திருநாவுக்கரசும் திரு. ஏஎல். பெரியகருப்பனும் பரிசுகளை வழங்கினர்கள்.

நகரத்தார் புத்தக வங்கியின் நிர்வாகிகளுக்கு தேவகோட்டை திரு ஏஎல். ஏஆர். காளைராஜா செட்டியார் பொன்னுடை அணிவித்தார்.

---

மதுவுக்குப் பேசும் ஆற்றல் இருக்குமானல் ''என்னை அருந்தியவர்கள் எல்லாம் ஆடினர்கள்; கண்ணதாசன்தான் பாடினர்.'' எனக் கூறும்.

— முனைவர் சுப. கதிரேசன்

---

## காதில் விழுந்தவை!

பெரியவர்கள் அறிவுரை சொல்லும் அளவிற்குப் புத்தக வங்கி இல்லை. விடாமுயற்சி ஒன்றுதான் பெரிய வெற்றியைக் கொடுக்கும். வாழ்க்கையில் முன்னேற, குடும்பத்தினரின் ஒத்துழைப்பு வேண்டும்.

— பழநியப்பன் இராமசாமி

நம் சமூகத்தில் மாற்றம் நிகழ வேண்டும்; ஆனல் பழைய மரபுகள் மாறக்கூடாது. நம்மினத்தில் பெண் திருமணம் ஒன்றுதான் பிரச்னை. செல்வமிக்கவர்கள் துணிந்து சீர்திருத்தம் செய்ய முன்வர வேண்டும். திருமண முறையை இறக்கவேண்டும். அரசு நமக்கு உதவாது; நம்மால் அரசை அச்சுறுத்தவும் முடியாது. எனவே நம்மை நாமே பாதுகாத்துக் கொள்ளவேண்டும்.

— பழ. கருப்பையா

ஆண்டவன் ஒவ்வொருவர் தலையிலும் ஒன்றை எழுதி வைத்திருக்கிருன். 'நீ எந்தக் கூட்டத்தில் பேசினலும் கடைசியாகவே பேச வேண்டும்' என்று என் தலையில் எழுதியிருக்கிருன். 2050ல் இந்தியா ஒரு சிறந்த வல்லரசாக மாறும். திரு. ஆர். சொக்கலிங்கம் அமைச்சராக வரவும் திரு. பழ. இராமசாமி நீதிபதியாக வரவும் அவர்களைப் பாராட்டுகிற சந்தர்ப்பத்தை எனக்கு அளிக்கவும் ஆண்டவனை வேண்டுகிறேன்.

— சொ சொ. மீ சுந்தரம்


இன்னும் 15 ஆண்டுகளில் திரு. பழ. இராமசாமி நீதிபதியாக வருவார் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை. அவர் அரசியலிலும் ஈடுபட வேண்டும்.

— அரு சோமசுந்தரம்

சிறந்த பழக்கத்தால் அனைவரது உள்ளத்தையும் கவர்ந்திருக்கும் திரு. பழ. இராமசாமிக்கு இந்தப் பாராட்டுப் பொருத்தமானதே.

— ஏ எல். பெரியகருப்பன்

(மதுரையில் 2—10—92 அன்று நடைபெற்ற நகரத்தார் இளைஞர் தின விழாவில்)



திரு. குமரிஅனந்தன் தலைமையில் 2-10-92 அன்று கன்னியா குமரியில் தொடங்கிய காங்கிரஸாரின் பாதயாத்திரை 16-10-92 அன்று மதுரை மாவட்ட எல்லைக்கு வந்தபோது மதுரை மாவட்ட இளைஞர் காங்கிரஸ் செயலாளரும் மதுரை நகரத்தார் இளைஞர் சங்கத் தலைவருமான திரு. இரா. சொக்கலிங்கம் தலைமையில் சிறப்பான வரவேற்பு அளிக்கப் பெற்றது திரு. சொக்கலிங்கம் அருகே திரு. ஏ. ஜி. எஸ். ராம்பாபு M. P. இருக்கிறார்.

---

# ஆசிரியருக்குக் கடிதம்

பெருமைக்குரிய வி. என். சிதம்பரம் செட்டியார் அவர்களுக்கு வணக்கம்.

''இதயம் பேசுகிறது'' 18-10-92 இதழில், 'நெஞ்சிருக்கும் வரை நினைவிருக்கும்' என்ற தலைப்பில் தீபாவளிச் சிறப்பிதழிலிருந்து தாங்கள் எழுதுவதாக வந்த செய்தியும் தங்களைப் பற்றிய அறிமுகமும் கண்டு மகிழ்ச்சியடைந்தேன். தங்களது கட்டுரைத் தொடருக்காக தொடர்ந்து '' இதயம் பேசுகிறது '' இதழை வாங்குவதாக முடிவு செய்திருக்கிறேன்.

நம்மினத்திற்குப் பெருமை சேர்க்கும் தங்களுக்கும் தங்களது கட்டுரைத் தொடரின் புதிய கருத்துக்களால் இதயத்தைப் பேச வைக்கும் அதன் ஆசிரியர் திரு. மணியன் அவர்கட்கும் எனது நல் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

நெஞ்சிருக்கும் வரை நினைவிருக்கும் – எந்த
நிலையிலும் படிப்பதில் சுவையிருக்கும்
அஞ்சிடும் மாந்தர்கள் யாவருக்கும் – உங்கள்
அனுபவத் தொடரால் பயனிருக்கும்


— கவிஞர் சிவல்புரி சிங்காரம், கீழச்சிவல்பட்டி

தகுதி ஒரு சிறிதும் இல்லாமல் ஒருவன் விரைவில் முன்னுக்கு வந்து பெரும் செல்வம் சேர்க்க இரண்டே வழிகளில்தான் முடியும். ஒன்று அரசியல்; மற்றொன்று சினிமா !

— கவியரசர் கண்ணதாசன்

## நகரத்தார்கள் காசி யாத்திரை

காரைக்குடியில் உள்ள ஸ்ரீகாசி நாட்டுக்கோட்டை நகரச் சத்திர மேலாண்மைக் கழகத்தின் ஏற்பாட்டில் நகரத்தார்கள் சென்னையிலிருந்து 17—10—92 அன்று வாரணசி துரித இரயிலில் வாரணசி புறப்பட்டுச் சென்றார் கள். வாரணசியில் தீபாவளியன்று (25—10—92) கங்கா ஸ்நானம் செய்து காசி விசாலாட்சி மற்றும் பக்கத்தில் உள்ள திருத்தலங் களில் வழிபாடுசெய்து 28-10-92 அன்று சென்னை திரும்பினார்கள். தீபாவளியன்று மாலை காசி விசாலாட்சி கோவிலில் திருவிளக் குப் பூஜை நடைபெற்றது. "நகரத்தார் குரல்" நிர்வாகப் பொறுப்பாளர் 'இரசிகமணி' இராம. சிதம்பரம் செட்டியார் அவர்கள் தம் துணைவியாருடன் கடந்த 14ஆண்டுகளாக தீபாவளி கங்கா ஸ்நானத்திற்கு வாரணசி சென்று வருகிறார்கள்.



அலவாக்கோட்டை திரு. ந. ராம. லெ. லெட்சுமணன் செட்டி யார் புதல்வன் செல்வன் சுப்பிரமணியனுக்கும் நாட்டரசன்கோட்டை ச. ராம ச. நா. இராமநாதன் செட்டியார் புதல்வி செல்வி கண்ணத் தாளுக்கும் 6-9-92 அன்று நாட்டரசன்கோட்டையில் திருமணம் சிறப் பாக நடைபெற்றது. திருமண வரவேற்பு 19-9-92 அன்று சென்னை ஹோட்டல் அசோகாவில் நடைபெற்றது. வரவேற்பு விழாவில் திரைப் பட நடிகர் திரு. அர்ஜுன் மற்றும் நண்பர்கள் கலந்து கொண்டனர்.



# செய்திகள் வாசிப்பவர்...

எல். சுந்தரம்

ஃ தமிழகத் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் மாண்புமிகு எஸ். ரகுபதி அவர்களின் புதல்வி திருமதி கவிதா சுப்பிரமணியத்திற்கு மலேஷியாவில் 16-10-92 அன்று பெண் குழந்தை பிறந்திருக்கிறது. தனக்குப் பேத்தி பிறந்திருக்கும் செய்தியை அவர் தமிழக முதல்வர் மாண்புமிகு ஜெ. ஜெயலலிதாவிடம் கூறி இனிப்பு வழங்கினார். முதல்வரும் அவருக்கு இனிப்பு வழங்கினார்.

ஃ ''கல்கண்டு'' இதழின் ஆசிரியர் திரு. லேனா தமிழ்வாணன் 27—9—92 அன்று சென்னையிலிருந்து புறப்பட்டு சிங்கப்பூர், ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து ஆகிய நாடுகளுக்குச் சென்றுவிட்டு 9—10—92 அன்று நலமாகத் தாயகம் திரும்பினார்.

ஃ வயிரவன் கோவில் நாட்டுக் கோட்டை நகரத்தார்கள் சங்கத்தின் பொதுக் குழுக் கூட்டம் வயிரவன்பட்டியில் உள்ள நகர விடுதியில் 7—11—92 (ஐப்பசி ௴ 22௳) சனிக்கிழமை காலை 11-00 மணிக்கு நடைபெறும் என அறிவிக்கப்பெற்றுள்ளது.

ஃ சைவ சித்தாந்த சரபம் தத்புருஷ தேசிகர் அவர்கள் எழுதி பிள்ளையார்பட்டி சிவநெறிக் கழகம் தயாரித்துள்ள 'கும்பாபிடேகத் தத்துவம்' என்ற நூல் பிள்ளையார்பட்டியில் 7—11—92 அன்று வெளியிடப்பட உள்ளது.

ஃ பாகனேரி அருள்மிகு செல்வ விநாயகர் திருக்கோவிலின் குடநீராட்டு மலர் வெளியீட்டு விழாவும் திரு. சுப. வே. மாணிக்கம் செட்டியாருக்குப் பாராட்டு விழாவும் 10-11-92 செவ்வாய் மாலை 4-00 மணிக்கு பாகனேரி

நகரத்தார் மாளிகையில் நடை பெறவிருக்கிறது.

ஃ தர்மபுரி அருள்மிகு சாலை விநாயகர் ஆலயத்தின் திருக்குட நன்னீராட்டு விழா 11—9—92 அன்று சிறப்பாக நடைபெற்றது.

ஃ குமார ராஜா மு. அ. மு. முத்தையா செட்டியார் அவர்களின் 64 ஆவது பிறந்த தின விழா சென்னை ராணி சீதை மன்றத்தில் 6—9—92 அன்று கொண்டாடப் பெற்றது.

ஃ விரையாச்சிலை நகர சுப்பிரமணிய சுவாமி திருக்கோவிலின் திருக்குட நன்னீராட்டு விழா 30—8—92 அன்று சிறப்பாக நடைபெற்றது.

ஃ ஈரோடு நகரத்தார் இளைஞர் நற்பணி மன்றத்தின் சிறப்புக் கூட்டம் 20—9—92 அன்று நடைபெற்றது

ஃ கோவை நகரத்தார் சங்கத்தின் சார்பில் 26—9—92 அன்று மாலை ''தேசத்தின் நலனுக்குத் தடையாய் இருப்பவர்கள் தலைவர்களே.., பொதுமக்களே ..'' என்ற தலைப்பில் பட்டி மண்டபம் நடைபெற்றது.

ஃ டாக்டர் ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் அவர்களின் 112 ஆவது பிறந்த நாள் விழா 30—9—92 அன்று சென்னை ராணி சீதை மன்றத்தில் கொண்டாடப் பெற்றது.

ஃ மதுரை ஆரப்பாளையத்தில் உள்ள ஸ்ரீ முத்து மாரியம்மன் கோவிலின் 24 ஆவது ஆண்டு உற்சவத்தில் 12—9—92 அன்று நகைச்சுவைக் கவிஞர் திரு. கரு. கருப்பையாவுக்கு 'இலக்கியத் தென்றல்' என்ற பட்டம் வழங்கப் பெற்றது.

ஃ 21-10-92அன்று சிவகங்கை மாநகருக்கு வருகை தந்தபோது தமிழக முதல்வர் மாண்புமிகு ஜெ. ஜெயலலிதா அவர்கள் காரைக்குடியில் நிறுவப் பெற்றுள்ள கவியரசு கண்ணதாசன் நினைவு மண்டபத்தைத் திறந்து வைத்தார்கள்.

---



படத்தில் காணும் திரு. இராம. பெரிச்சியப்பன் இப்போது அரூர் (தர்மபுரி மாவட்டம்) பத்திரப் பதிவுத்துறை அலுவலகத்தில் சார்பதிவாளராக (Sub Registrar) பணியாற்றி வருகிறார். 10-6-76ல் எழுத்தராகச் சேர்ந்த இவர் சென்ற மாதம் பதவி உயர்வு பெற்றுள்ளார்.

தேவகோட்டை செல்லஞ் செட்டியார் வகையைச் சேர்ந்த திரு. சோம. சே. இராமநாதன் செட்டியார் இவரது தந்தையார் ஆவார். பிள்ளையார்பட்டிக் கோவிலைச் சேர்ந்த திரு. பெரிச்சியப்பன் B. Sc. பட்டதாரி ஆவார். அவருக்கு நமது நல்வாழ்த்துக்கள்.



நாகை காயிதே மில்லத் மாவட்டம் கீழப்பெரும்பள்ளம் கிராமத்தில் அமைக்கப் பெற்றுள்ள தண்ணீர்த் தொட்டியை 8-9-92 அன்று மதுரை நகரத்தார் இளைஞர் சங்கத்தின் தலைவர் 'மனிதத் தேனீ' திரு இரா. சொக்கலிங்கம் திறந்து வைக்கும் காட்சி. அருகே தாசில் பண்ணை திரு. ஆர். இராஜசேகரன்.

## தஞ்சை சங்கத்தில் சிறப்புக் கூட்டம்

தஞ்சாவூர் நகரத்தார் சங்கத்தின் சார்பாக சிறப்புக் கூட்டமும் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளும் 15-8-92 அன்று சங்கத் தலைவர் திரு. என். மெய்யப்பன் தலைமையில் நடைபெற்றது.

தலைவர் திரு. என். மெய்யப்பன் வரவேற்புரை நிகழ்த்த, செயலாளர் திரு. ஜெமினி ஒய். பழனியப்பன் அறிக்கை சமர்ப்பித்தார். துணைத் தலைவர் திரு. பி. எல். தியாகராஜனும் இணைச் செயலாளர் திரு வள்ளியப்பனும் சிறப்பு விருந்தினர்களை அறிமுகப்படுத்தி உரை நிகழ்த்தினார்கள்.

பதிப்புச் செம்மல் முனைவர் திரு. ச. மெய்யப்பன் சிறப்புரை நிகழ்த்தி பரிசுகள் வழங்கினார். முனைவர் திரு. வ. தேனப்பன் 'நகரத்தாரின் தனிச் சிறப்புகள்' என்ற தலைப்பில் உரை நிகழ்த்தினார். திரு. மயில்வாகனன் வாழ்த்துரை வழங்கினார். விளையாட்டு விழாவிற்கு திரு. ஆர். எம். ரெங்கநாதன், திரு. என். லெட்சுமணன் திரு. பி. ஆர். இராமநாதன் ஆகியோர் நடுவர்களாக இருந்து பணியாற்றினார்கள்.

முடிவில் இணைச் செயலாளர் திரு. எம். ஆர். சுப்பிரமணியன் நன்றி கூறினார் விளையாட்டுப் போட்டிகளுக்கான பரிசுப் பொருட்களை திரு. சி. டி. சாத்தப்பன், திரு. ஜெமினி பழனியப்பன் திரு. வி. வள்ளியப்பன், திரு. எம். ஆர். சுப்பிரமணியன் ஆகியோர் வாங்கி அன்பளிப்பாக வழங்கினார்கள்.

## பிள்ளையார்பட்டியில் திருக்குட நன்னீராட்டு விழா

நகரக் கோவில்கள் ஒன்பதில் ஒன்றுன பிள்ளையார்பட்டி ஸ்ரீ கற்பக விநாயகர் கோவிலில் விமானங்களும் கோபுரங்களும் தளவரிசையும் பழுது பார்க்கப் பெற்று திருப்பணி நிறைவேறி அருள்மிகு கற்பகப் பிள்ளையார், திருவீசர், மருதீசர், சிவகாமி அம்மன், வாடாமலர் மங்கை முதலான எல்லா மூர்த்திகட்கும் விமானக் கோபுரங்களுக்கும் நாளது ஐப்பசி மீ 23 உ (8-11-1992) ஞாயிறன்று காலை 9-15 க்கு மேல் 10–30 மணி அளவில் திருக்குட நன்னீராட்டு விழா நடைபெற உள்ளது.

குடநீராட்டையொட்டி 1-11-92 ஞாயிறு காலை அனுக்ஞை, விக்னேஸ்வர பூஜை, தன பூஜையும், 2-11-92 திங்கள் காலை கணபதி ஹோமமும் 3-11-92 செவ்வாய் காலை நவக்கிரஹ ஹோமமும் நடைபெற உள்ளன.

முதல் கால யாகசாலைப் பூஜை 4-11-92 மாலை தொடங்குகிறது. 5-11-92 முதல் 7-11-92 வரை தினமும் காலை 8-30 முதல் பகல் 12-00 மணிவரையும் மாலை 6-00 முதல் இரவு 9-00 மணி வரையும் யாகசாலைப் பூஜைகள் நடைபெற உள்ளன. 8-11-92 ஞாயிறன்று அதிகாலை 5-30 மணிக்கு எட்டாம் கால யாக பூஜை. 8-15க்கு கடம் புறப்பாடு. காலை 9-15 முதல் 10-30 மணிக்குள் திருக்குட நன்னீராட்டு. மாலை 4-00 மணிக்கு மஹாபிஷேகம். இரவு 9-00 மணிக்கு பஞ்சமூர்த்தி தீபாராதனைகளும் பஞ்சமூர்த்தி திருவுலாவும் நடைபெற உள்ளன.

## ஒக்கூர் ஸ்ரீ சசிவர்ண விநாயகர் கோவில்

ஒக்கூர் ஸ்ரீ சசிவர்ண விநாயகர் கோவிலைப் புதிதாகக் கட்டி, திருப்பணி செய்து, திருக்குட நன்னீராட்டுச் செய்ய வாஸ்து நாளாகிய ஐப்பசி மீ 11உ (27-10-92) காலை 8-15 மணி அளவில் தேவகோட்டை தத்புருஷ தேசிகர் அவர்கள் முன்னிலையில் தச்சு செய்யப் பெற்றது. இந்நிகழ்ச்சியில் தேவகோட்டை சண்முக ஸ்தபதி கண்டரமாணிக்கம் மாணிக்க ஸ்தபதி, தேவகோட்டை சிதம்பர ஆசாரி ஆகியோரும் திருப்பணிக் குழுத் தலைவர் திரு. சிக. அரு. க. அரு. சோம. இராமநாதன் செட்டியார் மலர்க் குழுத் தலைவர் ஆடிட்டர் திரு. சி. சித. அண்ணமலை செட்டியார் நிர்வாகக் குழுவினர் மற்றும் நகரத்தார் பெருமக்கள் பெருமளவில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

14-11-92 சனிக்கிழமை மாலை 13 கும்பங்கள் வைத்து பூஜை, பாலாலயம் செய்து மறுநாள் 15-11-92 ஞாயிற்றுக் கிழமை காலை ஸ்ரீ சசிவர்ண விநாயகருக்கு அபிஷேகம் செய்ய நாள்ப் பார்த்திருப்பதாகவும் அனைவரும் நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு விநாயகரின் அருளைப் பெற வேண்டுமாறும் திருப்பணிக் குழுவினர் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

ஓராண்டிற்குள் திருப்பணி வேலைகளை முடித்து திருக்குட நன்னீராட்டுச் செய்யத் திட்டமிட்டுள்ளதாக நிர்வாகக் குழுவினர் தெரிவித்தனர்.

# போகமும் யோகமும் !



'இன்பம் இன்பம்' என்று இளமைக் காலத்துப் போக உணர்வில் தவித்திட்ட கவியரசர் கண்ணதாசன், 'இன்பம் எங்கே? இன்பம் எங்கே? எங்கிருந்தபோதும் அதை நாடி ஓடு'... என்று பாடினர். அடுத்து தத்துவ உணர்வு வந்ததும் இறையூற்றுப் பெருக்கெடுத்து யோக உணர்வோடு 'இன்பம் இன்பம் என்பதெல்லாம் துன்பத்தின் சாயலே' என்று பாடினர். அவர் பாடிய 'ஒரு புறம் வேடன்; மறுபுறம் நாகம்; இரண்டிற்கும் நடுவே அழகிய கலைமான்' எனும் பாடல் போலவே போகத்திற்கும் யோகத்திற்குமிடையில் தவித்திருக்கிருர். சுருக்கமாகச் சொல்லப்போனல் அவர் ஒரு பாதி கோவலன்; மறுபாதி பட்டினத்தார்.

— புலவர் மாமணி மா. முத்துராமன்

---

## கும்பகோணம் சங்கத்திற்கு புதிய நிர்வாகக் குழு

கும்பகோணம் நாட்டுக் கோட்டை நகரத்தார் சங்க உறுப்பினர்களின் ஒருமித்த கருத்துடன் மேற்படி சங்கத்திற்கும் சுவாமிமலை அறக்கட்டளைக்குமாகச் சேர்த்து 1992-93, 1993-94, 1994-95 ஆகிய மூன்று ஆண்டுகளுக்கு புதிய நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

பொன். புதுப்பட்டி திரு. எம். எஸ். எஸ்பி. சுப்பையா செட்டியார் அவர்கள் தலைவராகவும் திரு ஏ. நாச்சியப்ப செட்டியார், திரு. எஸ். சிடி. எஸ்பி. எல். சுப்பிரமணியன் செட்டியார் திரு. ஆர்எம். கேஎம். குமரப்ப செட்டியார் ஆகிய மூவரும் துணைத் தலைவர்களாகவும் திரு. பிஎல். திருநாவுக்கரசு செயலாளராகவும் திரு. எஸ்டி. ஆர்எம். சிதம்பரம் இணைச் செயலாளராகவும் திரு. ஏ, முத்துவீரப்பன் பொருளாளராகவும் மற்றும்

---

செயற்குழு உறுப்பினர்களும் பொறுப்பேற்றுள்ளனர்.

மேற்படி சங்கம் புதிதாக வாங்கப் பெற்றுள்ள 39 சாரங்க பாணி சன்னதி, கும்பகோணம்-612001 என்ற கட்டிட முகவரி யில் இயங்கி வருகிறது.

# உங்கள் குரல்

''நகரத்தார் குரல்'' அக்'92 இதழில் எங்கள் ஊர் குடநீராட்டு விழாவைப் பற்றிய செய்திகளை புகைப்படங்களுடன் சிறந்த முறையில் வெளியிட்டு எங்களை ஆனந்த வெள்ளத்தில் ஆழ்த்தி விட்டீர்கள். கட்டுரையில் எங்களையும் எங்கள் ஊர்மக்களை யும் பெருமைப்படுத்தி இருக் கிறீர்கள். மிக்க நன்றி.

அ. மு. சித. முத்தையா,
குடநீராட்டுக் குழுத் தலைவர்
குருவிக்கொண்டான்பட்டி

அக்'92 இதழில் கவியரசர் கண்ணதாசனைக் கண்முன் நிறுத்திவிட்டீர்கள். கவியரசரின் பலவீனங்களை அவர் முன்னிலை யிலேயே மேடையில் அஞ்சாமல் சுட்டிக் காட்டிய டாக்டர் அர. சி. அவர்களுக்கு கவியரசர் உரைத்த பதில்களையும் கேட்டு வாங்கி வெளியிட்டால் மிகவும் நல்லது.

சி. ஜம்புலிங்கம்
தேவகோட்டை

அக்'92 இதழ் கவியரசரின் நினைவு இதழாக, நிறைந்த செய்திகளுடனும் பல்வேறு அம் சங்களுடனும் வழக்கத்திற்கு மேல் அதிகப் பக்கங்களுடனும் சிறப்பாக இருந்தது.

ஏஎன். சிதம்பரம்
விரையாச்சிலை

முனைவர். அர. சிங்கார வடி வேலன் கவிஞர் சிவல்புரிசிங் காரம் ஆகியோரின் கவிதைகளும் முனைவர் சரசுவதி இராமநாதன் அவர்களின் கட்டுரையும் தங் களது கண்ணதாசன் நினைவு இதழுக்கு மெருகூட்டியுள்ளன. கவியரசரைப் பற்றிய துணுக்கு கள் யாவும் காலத்தால் அழி யாதவை.

வீர. சிவசுப்பிரமணியன்
சென்னை

கவிஞர் சிவல்புரியாரின் கவிதையும், கவியரசரைப் பற்றி ஜெயகாந்தன் கூறிய செய்தியும் எனக்கு மிக மிகப் பிடித்தவை.

கண. இராமநாதன்
சேலம்

## திருவொற்றியூர் சங்கத்தில் பாராட்டு விழா

திருவொற்றியூர் நகரத்தார் சங்கத்தின் ஒன்பதாம் ஆண்டு நிறைவு விழாவும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் மாண்பு மிகு எஸ். ரகுபதி அவர்களுக்குப் பாராட்டு விழாவும் 2-10-1992 அன்று திருவொற்றியூர் நகரச் சத்திரத்தில் நடைபெற்றது. மீனாட்சி திருமைந்தன் திரு. வி. என். சிதம்பரம் செட்டியாரவர் கள் தலைமை ஏற்றுப் பாராட்டிப் பேசினார்கள். திரு. எம். எஸ் ஆர்எம். மெய்யப்ப செட்டியா ரவர்களும், ''தினத்தந்தி'' உதவி ஆசிரியர் திரு மெய்யப்ப னும் அமைச்சருக்கு பாராட்டுத் தெரிவித்து, சங்கத்தின் நற்பணி பற்றிப் பேசினார்கள். விழாவிற்கு திருவொற்றியூர் தொகுதி சட்ட மன்ற உறுப்பினர் திரு. குப்பன் வருகை தந்தார்.

# காரைக்குடியும் கவியரசரும் !

காரைக்குடிக்குக் கவிஞர் வந்தால் இரண்டு இல்லங்களில்தான் தங்குவார். ஒன்று : நியூடவுன் முத்துவிலாஸ் இல்லம். மற்ருென்று ஜமீன் சுப. அவர்களின் இல்லம். இரு இல்லத்தினரும் பங்காளிகளே அதனுல்தானே என்னவோ காரைக்குடியில் ஒரு வீடு கட்டவேண்டு மென்ற எண்ணமே கவிஞருக்கு ஏற்படாமல் போயிற்று.

— கவிஞர் சோம. சிவப்பிரகாசம்

கண்ணதாசன் ஒரு திறந்த புத்தகம், தன் திருமணத்திற்குப் பெண்களைப் பார்த்து வந்த அவரிடம் ''உனக்கு எந்தப் பெண்ணைப் பிடித்திருக்கிறது?'' என அவரது தாயார் கேட்க, ''எனக்கு நான்கு பெண்களையுமே பிடித்திருக்கிறது'' என்ருர்.

— முனைவர் சுப. கதிரேசன்

---

## திருநெல்வேலி சங்கத்தில் இரங்கற் கூட்டம்

திருநெல்வேலி நகரத்தார் சங்கத்தின் துணைத் தலைவர் திரு. ஏ. அழகப்பன் 23–6–92 அன்றும் தலைவர் திரு. எஸ். சொக்கலிங்கம் செட்டியார் 2–9–92 அன்றும் இறைவனடி சேர்ந்தார்கள். அதற்கு சங்கத்தின் சார்பில் 20–9–92 அன்று இரங்கற் கூட்டம் நடைபெற்றது.

திரு. ஏ ஆர். ஏ ஆர். எம். ஏ ஆர். அருணுசலம் செட்டியார் தலைமையில் நடைபெற்ற இரங்கற் கூட்டத்தில் அவர்களின் குடும்பத் தாருக்கு ஆழ்ந்த அனுதாபம் தெரிவித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அவர்களின் சிறந்த சேவைகளைப் பாராட்டி திருவாளர்கள் எஸ்எம். நடராஜன் செட்டியார், கே. திருநாவுக்கரசு செட்டியார், பி எல். முருகப்பன், சி. கல்யாண கிருஷ்ணன், கே. கனகசபை செட்டியார், வி. சண்முகம் செட்டியார் பேராசிரியர் டாக்டர் கே என். கே. எஸ். கே. சொக்கலிங்கம் ஆகியோர் பேசினுர்கள்.

## திண்டுக்கல் சங்கத்தில் இரங்கல் தீர்மானம்

திண்டுக்கல் நகரத்தார் சங்கத்தைத் தோற்றுவித்து அதன் செயலாளராகச் சேவை செய்தவரும் திண்டுக்கல்லில் நகரத்தார்களுக்கென திருமண மண்டபம் கட்ட ஊக்குவித்தவரும் 26–8–92 அன்று இறைவன் திருவடியடைந் தவருமான வேகுப்பட்டி திரு. ஆ. வ. இராமநாதன் செட்டியாருக்கு 2–9–92 அன்று திண்டுக்கல் நகரத்தார் சங்கச் செயற்குழுக் கூட்டத்தில் இரங்கற் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

## இயற்கை எய்திஞர்

சீர்திருத்தவாதி கானுடு காத்தான் வை. சு. சண்முகம் செட்டியார் அவர்களின் பேத்தியும் பிரபல திரைப்பட இயக்குநர் எஸ்பி. முத்துராமன் அவர்களின் துணைவியாருமான திருமதி கமலா ஆச்சி அவர்கள் அண்மையில் இயற்கை எய்திவிட்டார்கள் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிருேம்.

## இயற்கை எய்தினர்

நாட்டரசன் கோட்டை கண. க. சொ. கண்ணப்ப செட்டியார் என்கிற அருணகிரிச் செட்டியார் அவர்கள் தமது 84 ஆவதுவயதில் 6-10-92 விஜயதசமி அன்று ஸ்ரீ கண்ணுடைய நாயகி அம்மன் கோவிலில் பகல் லட்சார்ச் சனையை நிறைவு செய்து, அம்மனை வலம் வந்து, கொடி ஸ்தம்பம் முன்நின்று கற்பூர தீபாராதனை பார்த்தபின் விழுந்து வணங்கிய நிலையில் அன்னை பராசக்தி பீடத்தில் முக்தியடைந்தார்கள். இது போன்ற அபூர்வ நிகழ்ச்சி அண்மைக் காலத்தில் நடை பெருத ஒன்ருகும்.

இவர்கள் வேத விற்பன்னர் களால் 'மகான்' எனப் போற்றிப் புகழப் பெற்றவர்கள். இவர்கள் நா. கோட்டை அருள்மிகு கரி கால சோழீஸ்வரர் ஆலயத்தில் 18 ஆண்டுகள் தொடர்ச்சியாக ருத்திர ஜபம், ஹோமம் செய்து முடித்தவர்கள். 20 ஆண்டுகளாக மேற்படி ஊர்அருள்மிகு ஸ்ரீ வெங் கடாசலபதி பெருமாள் கோவிலில் விஷ்ணு சகஸ்ரநாமம் பாரா யணம் செய்து வைத்தார்கள்.

தேவார ஓதுவாமூர்த்தி களின் உதவியுடன் நால்வர் குருபூஜையையும் காளையார் கோவிலில் ஸ்ரீ சொர்ணகாளீஸ் வரர் கோவிலில் மஹா சிவராத் திரியின் போது இரண்டாவது ராக்கால பூஜையையும் ஆண்டு தோறும் நடத்தி வந்தார்கள். மேற்படி கோவிலின் முன்பு உள்ள பால சுப்பிரமணிய சுவாமி யைப் பிரதிஷ்டை செய்து குட நீராட்டுச் செய்து வைத்தார்கள்.

இவர்களுக்கு கண. சொக்க லிங்கம் செட்டியார் என்ற முரு கப்ப செட்டியார் என்றபுதல்வரும் திருமதி மீனாட்சி ஆச்சி என்ற மருமகளும் பேரன், பேத்திகளும் கொள்ளுப் பேரன் பேத்திகளும் உள்ளனர்.

## பட்டமங்கலம் நயினர் கோவில்

பட்டமங்கலத்தில் உள்ள நயினர் கோவிலில் கார்த்திகை மாதம் 1, 8, 15, 22, 29 ஆகிய தேதிகளில் (16-11-92 முதல் 14-12-92 முடிய) சோம வாரங் கள் சிறப்பாகக் கொண்டாடப் பெறவிருப்பதாகவும் அந்த நாட் களில் காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை அர்ச்சனை செய்து திருநீறுப் பிரசாதம் வழங்கப் பெறுமென்றும் அங்கு வந்து போக 7A, 6B நகரப் பேருந்து வசதி இருப்பதாகவும் அக்கோவி லின் அறங்காவலர் திரு. கரு. இராமநாதன் அறிவித்துள்ளார்.

---

ஃ ''கன்னியரின் தோள் தொட்டபோது காணுத சுகத்தை அண்ணுவின் கால்களைத் தொட்ட போது கண்டேன்'' என்று பாடிய வர் கண்ணதாசன்.

---

எக்ஸ்போ பிரிண்டர்ஸ், 20, கிருஷ்ணுபுரம் 4-வது குறுக்குத் தெரு, மதுரை-625 009ல் அச்சிட்டு நடராஜ் அண்ணுமலை அவர்களால் அதே முகவரியிலிருந்து வெளிடப் பெறுகிறது. ஆசிரியர்: வி. என். சிதம்பரம்



காரைக்குடி கம்பன் திருநாள் ஒன்றில் கம்பன் அடிப்பொடி சா. கணேசனுர் அவர்கள் கவியரசர் கண்ணதாசனுக்கு மாலை அணிவிக்கும் காணக் கிடைக்காத காட்சி.

## கவியரசர் பற்றி கவிஞர் வாலி !

கவிஞர் கண்ணதாசனும் நானும் ஒரு முறை விமானத்தில் பம்பாய்க்குச் சென்றபோது கவிஞர் அவர்கள் பல விஷயங்களை என்னிடம் மனம் திறந்து பேசினர்கள். அரசியலில், தான் சம்பாதித்த பணத்தையெல்லாம் எப்படி விதரணையில்லாமல் செலவு செய்ய நேரிட்டது என்பதையும் சொந்தமாகத் திரைப் படங்கள் எடுத்து எவ்வாறெல்லாம், தான் சோகப்பட நேர்ந்தது என்பதையும் கவிஞர் என்னிடம் கதை கதையாகச் சொன்னர்கள்.


''எந்த ஜென்மத்திலும் சொந்தப் படம் எடுக்காதே ! எந்த அரசியல் கட்சியிலும் போய் மாட்டிக் கொள்ளாதே !'' என்று இரண்டே வாக்கியங்களை ரத்தினச் சுருக்கமாக எனக்கு உபதேசித் தருளினர்கள்.

— கவிஞர் வாலி

போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் ஏற்றால்
எடுத்துரைப்பேன்; எவர்வரினும் நில்லேன்; அஞ்சேன்

— கவியரசு கண்ணதாசன்

Regd. No. TN / MA / (C) / 106 NAGARATHAR KURAL



நமது இதழின் ஆசிரியர்

**வி. என்.**

**சிதம்பரம் செட்டியார்**

அவர்கள் எழுதும்

# "நெஞ்சிருக்கும் வரை நினைவிருக்கும்"

அனுபவத் தொடர்

## "இதயம் பேசுகிறது"

25 - 10 - 92 தீபாவளிச்

சிறப்பிதழிலிருந்து

வெளிவருகிறது !